மன்றம்

ஆசிரியர்:
இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

15 – 5 – 56

★

அணி 4

★

களிருமுறை

தூத்துக்குடி மாநாடும் ஈரோடு மாநாடும்

1947 ஆகஸ்டு 15 ஆம் நாள் வெள்ளையர் ஆதிக்கம் வெளியேறிய நாளாதலால், அது மகிழ்ச்சிக்குரிய நாளே என்று அறிஞர் அண்ணா அவர்கள் கூற, காங்கிரசார் ஆட்சிப் பொறுப்பை ஏற்பதால் அது துக்கத்திற்குரிய நாளே என்று பெரியார் இராமசாமி அவர்கள் கூற அப்பொழுது கழகத் தோழர்கள் கருத்தில் இரு வேறு பகுதியினராகப் பிரிந்தனர். பெரியார் கூறினாலும் அதைப்பற்றிச் சிந்தித்து அதில் தெளிவுபெறவேண்டும் என்று கருதினவர்கள் அறிஞர் அண்ணா அவர்கள் கூற்றையும், பெரியார் கூறிவிட்டதால் அதனை அப்படியே ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கருதினவர்கள் பெரியார் அவர்கள் கூற்றையும் ஆதரித்து நின்றனர். அண்ணாவைப் பின்பற்றுவோர், பெரியாரைப் பின்பற்றுவோர் என்று இரண்டு பிரிவினராகக் கழகத்தோழர்கள் பட்டும் படாததுமாகப் பிரிந்திருந்தனர்.

1948 இடைப்பகுதியில் தூத்துக்குடியில் திராவிடக்கழக மாநிலமாநாடு கூட்டப்பெற்றது. பெரியார் அவர்களே முன்னின்று மாநாட்டிற்கான எல்லாஏற்பாடுகளையும் செய்தார்கள். அண்ணாவும் அவரைச் சார்ந்தோரும் தம்மைக் கவிழ்க்கத் திட்டம் போட்டிருப்பதாகவும், அவர்கள் மாநாட்டிற்கு வந்து குழப்பம் செய்ய இருப்பதாகவும், அவர்கள் குழப்பம் செய்யும்போது தம்மைப் பின்பற்றுவோர் அடி, உதை ஆகியவைகளை வாங்கிக்கொண்டு அமைதியாக இருக்கவேண்டும் என்றும் பெரியார் அவர்கள் மாநாட்டிற்கு முன்பு பொதுக்கூட்டங்களில் பேசியும், 'விடுதலை'யில் எழுதியும் வந்தார்கள்.

இல்லாத ஒன்றைக் கற்பனை செய்துகொண்டு பேசியும், எழுதியும் வந்த பெரியாரின் போக்கைக் கண்டு மனம் வருந்திய அண்ணா அவர்களும் அவரைச்சார்ந்த பிறரும் மாநாட்டிற்குப் போகாமல் இருந்துவிடுவது மேல் என்ற முடிவுக்கு வந்தனர். மாநாட்டில் கூடியிருந்த மக்களில் பெரும்பாலோர் அண்ணாவின் வரவை எதிர்பார்த்திருந்த தன்மையும், "அண்ணா ஏன் வரவில்லை?" என்று பலர் கேட்ட கேள்வியும் பெரியார் அவர்களுக்குப் பொறாமையையும், எரிச்சலையும், சினத்தையும் மூட்டிவிட்டன. அது காரணமாகப் பெரியார் அவர்கள் மாநாட்டில் பேசும்போது அண்ணாவைக் கண்டவாறு இழித்துக்கூறவும் செய்தார்கள்.

மாநாடு முடிந்ததற்குப் பிறகு பெரியாரைப் பின்பற்றுவோர், அறிஞர்அண்ணாவையும், அவரைப் பின்பற்றுவோரையும் கண்டகண்ட இடங்களில் ஏசவும், தூற்றவும், வெறுக்கவும் தலைப்பட்டனர். அறிஞர் அண்ணாஅவர்கள் எதையும் பொருட்படுத்தாமல் அமைதியாகக் கடமையைஆற்றிவந்தார்கள்.

பிறகு 1948 ஆகஸ்டு திங்கள் வாக்கில் இந்திஎதிர்ப்புக்கிளர்ச்சி மூண்டது. அறிஞர் அண்ணாவும் பிறரும் தீவிரப்பங்கு கொண்டனர். கிளர்ச்சியின் படைத்தலைவராக அண்ணா அவர்கள் பொறுப்பேற்றார்கள். பெரியார் அவர்கள் அண்ணாவிடம் நெருங்கிய தொடர்பும், மிக்க பற்றும் வைக்க முற்பட்டார்கள்.

அதே ஆண்டில், தூத்துக்குடி மாநாட்டிற்கு அண்ணாஅவர்கள் வராததனால் ஏற்பட்ட குறையைப் போக்கப், பெரியார் அவர்கள் ஈரோட்டில் தனி மாநில மாநாடு ஒன்றைக்கூட்டி, அதற்கு அண்ணா அவர்களைத் தலைமை தாங்கும்படி செய்தார்கள்.

பெரியாரின் போக்கு அண்ணாவிற்குப் பலதடவைகளில் மனக்கசப்பை உண்டாக்கியிருந்தாலும், கடமையாற்ற கழகம் அழைக்கும்போதெல்லாம் அறிஞர் அண்ணா அவர்கள் முன்னணியில் நின்றே பணியாற்றிவந்திருக்கிறார்கள். எனவேதான் தூத்துக்குடிமாநாட்டிற்குக் கண்ணியம் காரணமாகச் செல்லாத அறிஞர் அண்ணாஅவர்களை ஈரோடு மாநாடு கடமைகாரணமாக வருந்தி அழைத்தது.

மன்றம்

இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

மலர் 5 ★ (15—5—56) ★ இதழ் 2

திருச்சி அழைக்கிறது!

அணி திரள்கிறது, அசைந்தாடும் கொடி அழைக்கிறது, திராவிடத்தின் பார்வை திருச்சி நோக்கித் திரும்பி யிருக்கிறது!

சிங்கத்தின் பார்வை—சீரார் திராவிடத்தின் சிந்தை குளிரும் பார்வை திருச்சியின் பக்கம் திரும்பி யிருக்கிறது!

திராவிட முன்னேற்றக்கழகத்தின் இரண்டாவது மாநில மாநாடு—இருள் மண்டியிருக்கும் நாட்டில் ஏற்றப்படும் இரண்டாவது சுடர் விளக்கு!

மாநில மாநாடு கூடுகிறது! எலியென நம்மை இகழ்ந்தவர் நடுங்கப் புலியெனச் செயல் செய்யப் புறப்பட்ட வீரர்கூட்டம் அங்கே கூடுகின்றது! களம்பல கண்டவர்கள், பாடுபல பட்டவர்கள், தியாகத் தீயில் புடம் போட்டத் தங்கச் செல்வங்கள், அண்ணாவின் அருமைத் தம்பிமார்கள் அங்கே கூடுகின்றனர். கோட்டையில், பாசறையில், வானில் அசைந்தாடும் இருவண்ணக் கொடியின் கீழ் அவர்கள் கூடுகின்றனர்!

நாடு சிதைந்தது, நலம் பல சிதறின, கோட்டைகள் அழிந்தன, கொடிகள் தாழ்ந்தன, அன்று அவனிகண்டு வியந்த நாகரிகம் இன்று அவமதிக்கப்படுகிறது, திராவிடம் தேம்பித் தவிக்கிறது. "அழிந்தது திராவிடம்!" என்று வடநாடு ஆர்ப்பரித்த நேரத்தில், டில்லி ஆதிபத்தியம் அவமதிப்பை வீசிய நேரத்தில், "திராவிடம் அழியவில்லை அடங்கிக் கிடக்கிறது; மாளவில்லை, மயங்கிக் கிடக்கிறது!" என்ற குரல் வந்தது. அடங்கிக்கிடந்த நாடு, உறங்கிக் கிடந்த வீரம் எழுகிறது. அந்த எழுச்சியின் உருவமே திராவிட முன்னேற்றக் கழகம்! மங்கிய விளக்கு, அணைந்து போக விருந்த சுடர் மீண்டும் ஒளி விடுகிறது, வளர்கிறது, ஒளியிழந்த கண்களில் ஒளி சேர்க்கிறது! "காலம் மாறிவிட்டது, நாட்டை அலங்கோலப்படுத்தும் தருக்கர் ஆட்சியின் காலம் மாறிவிட்டது!" என்பதே திராவிடத்தின் குரல் என்று திருச்சி மாநாடு அறிவிக்கிறது.

வானம் பொய்த்தாலும், மழை மறந்தாலும், காவிரியாறுமட்டும் தான் கொடுக்க வேண்டிய தண்ணீரை மறப்பதில்லையாம். மலையின் தலையைக் குட்டி, தண்ணீரைப் பெயர்த்தெடுத்து மக்களுக்கு அது கொடுக்கும். அந்தக் காவிரிக் கரையில் கழக மாநாடு கூடுகிறது. யார்பொய்த்தாலும், நாட்டிற்குச் செய்ய வேண்டிய கடமையை-பொறுப்பை ஆட்சியாளர் மறந்தாலும் கழகம்மட்டும் நாட்டை மறக்கவில்லை, என்பதை உணர்த்துவதுபோல, காவிரிக்கரையில் மாநாடு—பாசறை அமைகிறது.

மாற்றாரைப் பயமுறுத்தும் பாசறை—ஆனால் நமது குடும்பத்தினரைப் பரவசப்படுத்தும் கூடாரம்! குடும்பத்தினர், அண்ணன் தம்பியர், அன்பு நிறை மக்கள் கூடினால் குதூகலத்திற்கு கேட்க வேண்டுமா? நேசத்தின் நெடுங்கரங்கள் அணைத்திட, பாசத்தின் உறைவிடமாக—பண்பின் பாசறையாக மாநாடு மாறுகிறது!

கழகத்தோழர்கள் மட்டுமல்ல, கழகத்தின் மேல் காரணமற்ற வெறுப்புகொண்டோர், கழகமென்றால் காய்ந்திடும் புல்லர்கள், "அப்படியொன்று இல்லையே" என்று கதறிடும் கனம்கள் ஆகிய எல்லோரையும் "இல்லையென்று சொல்பவர்களே! திருச்சி எல்லைவந்து காண்பீரே!" என்று மாநாடு அழைக்கிறது. கழகமென்றால் நாலைந்துபேர்தான் என்று கூறி கனைத்திடும் காமராசர்களையும் மாநாடு அழைக்கிறது "பழுதுபட்ட விழியினரே! பண்பறியா மொழியினரே! இதோ பாருங்கள்! அணிவகுத்திருக்கும் கூட்டத்தை!" என்று. அதிகாரமேற்றவர்களுக்கு ஆணவம் ஏற்பட்டால் ஆபத்து, அத்துடன் அறியாமை இருந்தால்—அரசியல் அறியாமை மட்டும் இங்கு குறிப்பிடப்படுகிறது—அது மிகவும் ஆபத்து. நாட்டுக்கல்ல, அவருக்கு. கல்மேட்டின்மீது தாவி விழுவது ஆபத்து. அத்துடன் கண்ணையும் மூடிக்கொண்டு தாவினால்—ஆபத்து அதிகம், ஆட்சியாளருக்கு எச்சரிக்கை—அல்லலுற்ற நாட்டு மக்களுக்கு ஒரு நற்செய்தி திருச்சி மாநாடு தருகிறது.

திட்டங்கள் — திராவிடத்தின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் தீர்மானங்கள் மாநாட்டில் உருவாக்கப்படப்போகின்றன. கண்ணியம், கட்டுப்பாடு, செயலாற்றும் திறம் இவைகளை அடிப்படையாகக் கொண்ட கட்சியினர்

தீட்டிடும் திட்டங்கள்! திராவிடத்தின் வாழ்வு கங்கைதீரத்திலோ, டில்லிப் பாலைவனத்திலோ நிர்ணயிக்கப்படுவதை மாற்றி அமைத்து, வளமார் திராவிடத்தின் வாழ்வு திராவிடத்திலேயே தீட்டப்படும் காட்சி! இரண்டாவது மாநில மாநாட்டில் நாட்டை எதிர்நோக்கியிருக்கும் எல்லா சூழ்நிலைகளும், கொள்கைகளும் ஆராயப்படுகின்றன! மற்றக்கட்சிகளுக்கு இல்லாத பொறுப்பு—மற்ற கட்சிகள் ஏற்றுக்கொள்ளாத பெரும்பொறுப்பைத் திராவிடமுன்னேற்றக்கழகம் ஏற்றுக்கொண்டுள்ளது. இருக்கும் நிலைக்குள் மாறுதல்கள்—அரசியல் துறையில் அதிகாரப்பதவி, ஏதாவது பங்கு, இந்த அளவில் அது பணியாற்றவில்லை. புதிய சமுதாயத்தை, புதியதொரு அரசியலமைப்பை, புதிய பொருளாதார நிலையை உண்டாக்க அது பாடுபடுகிறது. அதன் பரந்த குறிக்கோள், அதன்மீது அமைக்கப்படும் கொள்கைகளுக்கு அடிப்படையாகிறது! அரசியல், பொருளாதார, சமுதாயமெனும் மூன்று பெரும் பிரிவுகள்பற்றிய கழகக் கொள்கைகளை! மாநில மாநாடுகள் செப்பனிடுகின்றன. அவ்வகையில் திருச்சி மாநாடு, கழகத்தின் வரலாற்றில் முக்கியமான இடத்தைப் பெறுகிறது.

கழகத்தோழர்கள், நாட்டின் கண்மணிகளை திராவிடம் அழைக்கிறது, திருச்சி அழைக்கிறது! அம்பில் அழைக்கிறார், அருமைத் தம்பிமார்கள் அழைக்கின்றார்கள், மணி அழைக்கிறார், முத்து அழைக்கிறார்; நாட்டின் மணிகளை, நன்முத்துக்களை அழைக்கிறார்கள்! குழலும் யாழும், 'அமிழ்தூறும் இசையும் அழைக்கின்றன! தமிழகத்தின் மங்காத இசைச் செல்வங்கள். ஆடுதுறைச் செல்வர் இசையாடுதுறை மன்னரின், இனிய கானம் அழைக்கிறது! நடிப்புப் புலவரின் இசையும், நகைச்சுவை மன்னரின் சிரிப்பும் அழைக்கின்றன. புரட்சி நடிகர் இலட்சிய நடிகர் அழைக்கிறார்கள், இலட்சிய நாடகங்கள் காத்திருக்கின்றன!

அழைக்கின்றது திராவிடம்! அழைக்கிறது எதிர்காலம்! அழைக்கின்றார், அழைக்கின்றார் அருமை அண்ணா, அழகிய நம் திராவிடத்தை அமைத்திடவே! திருச்சி நகரம் தனது கோட்டையெனும் தலையை உயர்த்தி, செழுமணிக்கொடிகளெனும் கைகளைநீட்டி, "வாருங்கள்! அருகில் வாருங்கள்!" என்று அழைக்கிறது.

திருச்சி அழைக்கிறது! கழகம் அசைக்கவும்! அசைந்தாடும் கொடி அழைக்கிறது. "தீரரே வாருங்கள், திருச்சி வந்து பாருங்கள்!" என்று!

திராவிட முன்னேற்றக் கழக

இரண்டாவது மாநில மாநாடு

திருச்சிராப்பள்ளி

திருச்சி இரயில்வே நிலையத்திற்கு அருகிலுள்ள பந்தயத்திடலில் அமைந்துள்ள 'வள்ளுவர் நகரில்'

மே 17, 18, 19, 20-இல்

நடைபெறும்

★

தலைவர்:	இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.
துவக்குபவர்:	ஜி. பி. சோமசுந்தரம்
கண்காட்சித் திறப்பாளர்:	என். வி. நடராசன்
கருத்துரை:	கழகச்சொற்பொழிவாளர்கள்
நாதசுர இசை:	திருவாவடுதுறை இராசரத்தினம்
வில்லுப்பாட்டு:	என். எஸ். கிருஷ்ணன்
இன்னிசை:	கே. ஆர். இராமசாமி
	அனீபா, கஸ்தூரி, செல்வா
நாடகங்கள்:	எம். ஜி. ஆர். குழுவினர்
	எஸ். எஸ். ஆர். குழுவினர்
தி. மு. க. விருது பெறுபவர்:	மூவலூர் இராமாமிர்தத்தம்மையார்

எம். எஸ். மணி—எஸ். முத்து, செயலாளர்கள்.

அ. பெ. தருமலிங்கம், ,, தலைவர்— வரவேற்புக்குழு.

நிகழ்ச்சி நிரல்

16—5—56 புதன்

	மணி	
காலை	6-00	— திருச்சி இரயில் சந்திப்பில் மாநாட்டுத் தலைவருக்கு வரவேற்பு
,,	10-00	— பொதுக்குழுக் கூட்டம்
நண்பகல்	1-00	
,,	1-00	— இடைவேளை
மாலை	3-00	
,,	3-00	— பொதுக்குழுக் கூட்டம்
இரவு	7-30	
,,	7-30	— 16-ஆம் நாள் நிகழ்ச்சி முடிவு

17—5—56 வியாழன்

	மணி	
காலை	9-30	— ஊர்வலம் துவக்கம் [திருச்சி சிந்தாமணியிலிருந்து 'வள்ளுவர் நகரு'க்கு]
நண்பகல்	1-00	— கொடியேற்று விழா: மாநாட்டுத் தலைவர்
,,	1-30 }	— இடைவேளை
மாலை	4-00 }	
,,	4-00	— 'புத்தர் வரலாறு' வில்லுப்பாட்டு: கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்
,,	5-00	— கண்காட்சி திறப்புவிழா துணைப்பொதுச்செயலாளர் தோழர் என். வி. நடராசன்
,,	5-30	— இன்னிசை அரங்கு: நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி
,,	6-30	— நாதசுர இசை அரங்கு: இசைப்பெரும் புலவர் திருவாவடுதுறை டி. என். இராசரத்தினம்
இரவு	8-00	— மூவலூர் மூதாட்டி இராமாமிர்தத்தம்மையார் அவர்களுக்கு விருது வழங்குதல்—அறிஞர் அண்ணு பாராட்டுரை
,,	8-30 }	— இடைவேளை
,,	10-00 }	
,,	10-00	— 'புது வெள்ளம்' நாடகம்: இலட்சியநடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் குழுவினர்
,,	1-00	— நிகழ்ச்சி முடிவு

18—5—56 வெள்ளி

	மணி	
காலை	7-30 }	— பிரதிநிதிகள் கூட்டம்
,,	8-30 }	
,,	9-00	— இன்னிசை அரங்கு: இசை முரசு அனீபா
,,	10-00	— இசைச் செல்வி ஜி. கஸ்தூரி
,,	11-00	— துவக்கவுரை: தோழர் ஜி. பி. சோமசுந்தரம்
,,	12-00	— வரவேற்புரை: தோழர் அ. பெ. தருமலிங்கம்
நண்பகல்	1-00 }	— இடைவேளை
மாலை	3-30 }	
,,	3-30	— இன்னிசை அரங்கு: இசைக்குயில் பி. எஸ். செல்வா
,,	4-30	— தலைவரை முன்மொழிதல்
	4-45	— ,, வழிமொழிதல்
,,	6-00	— தலைவர் முன்னுரை: தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.
இரவு	8-00 }	— இடைவேளை
,,	10-00 }	
,,	10-00	— 'மணிமகுடம்' நாடகம்: இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் குழுவினர்
,,	1-00	— நிகழ்ச்சி முடிவு

19—5—56 சனி

மணி
காலை

9-00— சிறப்புச் சொற்பொழிவுகள்:

1. 'விடுதலைக் கிளர்ச்சிகள்'
   — தோழர் கே. ஏ. மதியழகன் பி. ஏ.
2. 'தொழில் புரட்சி'
   — தோழர் காஞ்சி கல்யாணசுந்தரம்
3. 'உரிமைக் கிளர்ச்சிகள்'
   — தோழியர் அருண்மொழி பி. ஓ. எல்.
4. 'ஜனநாயகம்'
   — தோழர் கி. மனோகரன் பி. ஏ. (ஆனர்ஸ்)
5. 'கல்வித் திட்டம்'
   — தோழர் வி. ஜி. இராசையா பி.ஏ.,எல்.டி.

6. 'நாட்டுப் பணியில் மாணவர் பங்கு'
— தோழர் தில்லை வில்லாளன்

7. 'தமிழ் இலக்கியத்தில் அரசியல் கருத்துக்கள்'
— தோழர் க. அன்பழகன் எம்.ஏ.

8. 'தனி நாடு அமைப்பும் பொருளாதார வசதிகளும்'
— தோழர் என். எஸ். இளங்கோ

9. 'திராவிடத்தின் உலகத் தொடர்புகள்'
— தோழர் மு. கருணாநிதி

நண்பகல் 1-30 }
மாலை 3-00 } — இடைவேளை

மாலை 3-00

10. 'தாய்க்குல வரலாறு'
— தோழியர் சத்தியவாணிமுத்து

11. 'மொழிப் பிரச்சினைகள்'
— தோழர் கண்ணதாசன்

12. 'கலையில் கருத்துப் புரட்சி'
— தோழர் சி. பி. சிற்றரசு

13. 'தத்துவ வரலாறு'
— தோழர் டி. கே. சீனிவாசன்

14. 'புத்தர் நெறி'
— தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி

15. 'உலகைத் திருத்திய உத்தமர்கள்'
— தோழர் அரங்கண்ணல்

16. 'உலக அமைதி'
— தோழர் ப. உ. சண்முகம்
'மறைந்த இயக்க மாவீரர்கள்'
— தோழர் என். வி. நடராசன்

18. 'இந்திய அரசியலில் கொள்கைக் குழப்பங்கள்'
— தோழர் ஈ. வெ. கி. சம்பத்

இரவு 8-30 }
,, 10-00 } — இடைவேளை

,, 10-00 — 'அட்வகேட் அமரன்' நாடகம்: புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் குழுவினர்.

,, 1-00 — நிகழ்ச்சி முடிவு

20—5—56 ஞாயிறு

மணி

காலை 7-30 }
,, 8-30 } — பிரதிநிதிகள் கூட்டம்

,, 9-00 — தீர்மானங்கள் நிறைவேற்றல்

நண்பகல் 1-30 }
மாலை 3-30 } — இடைவேளை

,, 3-30 — தீர்மானங்கள் நிறைவேற்றல்

,, 6-00 — அறிஞர் அண்ணு சிறப்புரை

இரவு 7-30 — தலைவர் முடிவுரை

,, 8-00 — நன்றியுரை

,, 8-30 }
,, 10-00 } — இடைவேளை

,, 10-00 — 'சுமை தாங்கி' நாடகம்: புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் குழுவினர்

,, 1-00 — நிகழ்ச்சி முடிவு

குறிப்பு:—பொதுத்தேர்தல் குறித்துத் தி. மு. கழகத்தின் முடிவு எதுவாக இருக்க வேண்டும் என்பதுபற்றி, மாநாட்டிற்கு வருகை தருவோரின் கருத்து வாக்குரிமைச் சீட்டு மூலம் 19—5—1956 காலை 6 மணியிலிருந்து மாலை 6-மணிக்குள் அறியப்படும்.

★

புத்தரின் கேள்வி

புத்தரின் துறவு உலக வரலாற்றில் மிகச் சிறந்ததாகும்

இந்தியாவில் அன்றுதொட்டு இன்றுவரை துறவிகளுக்குக் குறைவில்லை. காவியணிந்தவர்கள், கமண்டலமேந்தியவர்கள், காட்டில் வசிப்பவர்கள், கடுந்தவம் புரிபவர்கள் உலகில் வேறெங்கும் காணக்கிடைக்க முடியாத அளவுக்கு இந்த உபகண்டத்தில் இருந்திருக்கின்றனர். புத்தரைவிடக் கடுமையான துறவிகள் இருந்திருக்கின்றனர். புத்தரைவிட இளம் வயதில் துறவியானவர்களும் உண்டு. ஆனால் மற்றவர்கள் துறவிகளாவதற்கும், சித்தார்த்தன் துறவியானதற்கும் பலத்த வேறுபாடு உண்டு.

ஏழ்மையும் சோம்பலும் பலரைத்துறவிகளாக்கியிருக்கின்றன, வாழ்வில் ஏற்பட்ட ஏமாற்றங்கள், மனைவியிடம் சந்தேகம், பெண்களிடம் மோகம், மக்களிடம் உற்றார் உறவினரிடை சண்டை ஆகியவை சிலரைக் காவியை பூணச்செய்திருக்கின்றன. உலகின்மீது வாழ்வின்மீது உண்டான வெறுப்பு சிலரைக் காட்டுக்கு அனுப்பியது. "வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்" என்ற வேதாந்தத்தை நம்பியவர்கள் துறவிகளாயிருக்கின்றனர். இகலோக இன்பத்தை வெறுத்து, பரலோக இன்பமே நிலையானது என்று, மோட்சம் வேண்டி பரமனைப்பாடிச் சென்ற துறவிகள் பலர்.

ஆனால் சித்தார்த்தர் துறவியாவதற்கு இந்தச் சூழ்நிலைகள், குறிக்கோள்கள் எதுவும் காரணமாக அமையவில்லை.

அவர் பிறந்தது அரண்மனையில் இளவரசனாக! ஏழ்மையின் கொடுமை என்றும் அந்த அரண்மனைக்கருகில் தலை காட்டியதில்லை. அரச வாழ்வு இன்ப மயமாக, என்றும் மாறாத திருநாளாக, வற்றாத உல்லாசக்கூடமாக இருந்தது.

மனைவியிடம் வெறுப்பு ஏற்பட்டதா? அல்ல, அல்ல. அழகு மனைவி யசோதரையை அளவற்ற காதலுடன் அவர் காதலித்தார். அவளைக்கண்ட நாளிலிருந்து, பின் மணந்தநாளிலிருந்து அவர்களின் வாழ்வு காதல் மயமாகத்தான் இருந்தது. பேசும் விழியும், இசை வீசும் மொழியும், நீலவானும் நிலவின் பயனும், தென்றலும், தேனும், மலரும் காதல் மணமும், திகட்டாத விருந்தாக—வசந்தம் மாறாத இன்பமாக அவர்களுக்கு இருந்தது. அரண்மனையை விட்டு வெளியேறவேண்டுமென்று சித்தார்த்தர் நிச்சயித்த கடைசி இரவு. அன்றுகூட, மனைவியின் முகத்தைப் பார்க்கும்பொழுது இளவரசனின் மனம் தத்தளித்ததாம். பூத்த புது மலராய், புன்னகையின் புகலிடமாய் விளங்கிடும் இளவரசனின் முகத்தில் கவலை தேங்கி இருப்பதைக் கண்ட யசோதரை கலங்கி, கண்ணீர்விட்டுக் கேட்கிறாள். "கண்ணாளா! என்ன நேர்ந்தது, என்னிடம் கூறமாட்டீரோ?" என்று.

"கண்ணே! கவலையை விடு! உலகம் அசைந்தாலும், உயர்ந்தவைகள் வீழ்ந்தாலும், காலப்போக்கில் நம்மிடை மாறுதல்கள் பல நேர்ந்தாலும், கண்மணி! இதைமட்டும் உறுதியாகத் தெரிந்துகொள். என் யசோதரையை காதலித்தேன், காதலித்தேன், காதலிக்கிறேன். அதில் எள்ளளவும் குறை கிடையாது!" என்று மனைவியின் கண்ணீரைத் துடைத்து இளவரசர் உறங்கவைக்கிறார். நடுநிசியில் அழகு மனைவியையும், அருமைக் குழந்தையையும் விட்டுப் பிரியும்பொழுதும், அவர்கொண்ட காதலில் குறைகாணப்படவில்லை.

வாழ்வில் அவருக்கு வெறுப்பு ஏற்படவில்லை. "வாழ்வாவது மாயம்" என்ற வரட்டு வேதாந்தம் அவரைக் காவி வேடதாரியாக்கவில்லை.

காதல் மனைவியை அவர் வெறுக்கவில்லை. கனிமொழி பேசும் மகனை அவர் வெறுக்கவில்லை. உற்றார் உறவினரையோ, ஊரையோ உலகத்தையோ வெறுத்து அவர் வெளியேறிச் செல்லவில்லை. உலகின் மீது கொண்ட வெறுப்பாலல்ல அவர் அரச வாழ்வைத் துறந்து ஆண்டிக்கோலத்தினரானது! உலகின்மீது கொண்ட அன்பு, மக்கள்குலம் அனைத்தின்மீதுகொண்ட அன்பு அவரை வெளியேறச் செய்தது!

துறவியாகி, தவக்கோலத்திலிருப்பவன் கடவுளிடம் பெற விரும்புவது, "இறைவா! என் பிறவித்துன்பத்தை நீக்கிவிடு! உலக மாயத்திலிருந்து என்னை விடுவித்து, உன் பாத கமலத்தில் சேர்த்துக்கொள்! என் பாபத்தைப் போக்கி, பரமபதத்தில் இடம்தா!" என்பவைகளாகும். தவத்தின்மூலம், துறவின் மூலம் இவைகள் கிடக்கின்றனவா என்பது ஒருபுறமிருக்கட்டும். அவைகள் கிடைப்பதாக வைத்துக்கொண்டாலும், துறவி பாடுபடுவதெல்லாம் தனக்காக—தனக்கு மோட்சம் கிடைக்க—தன் ஆத்மாவுக்கு நல்லகதி கிடைக்க வேண்டுமென்பதற்காக! ஆனால் புத்தர் துறவியாக வெளியேறியது தனக்காக அல்ல, உலக மக்கள் இன்பமாக வாழ்வதற்கு என்ன வழி என்பதாலாகும்.

உண்மையைக் காணவேண்டும், உலகு அமைதியுடன் வாழ ஒரு வழி தேடவேண்டும் என்ற உயர்தர உள்ளப்பாங்குடன் சித்தார்த்தர் அரசவாழ்க்கையைவிட்டு வெளியேறினர். உண்மையைக் காணவேண்டும் என்பதற்கு விஞ்ஞானிகள் எவ்வளவு பாடுகிறார்கள், அயராது உழைக்கிறார்கள், ஆபத்துக்களை அணைத்துக்கொள்கிறார்கள்! உண்மைகளைக் கண்டறிவதன் பலன் என்ன? உலகம் உயர்கிறது, வாழ்வு செழிப்படைகிறது, மக்களின் துன்பம் குறைந்து இன்பம் அதிகமாகிறது. அதேவித விஞ்ஞான மனப்பான்மையுடன், உண்மையைக் காணவேண்டும் என்ற மனவுறுதியுடன் சித்தார்த்தர் வெளியேறினர்.

சித்தார்த்தன் வெளியேறினன், அரண்மனையைவிட்டு, ஆளும் இளவரசைவிட்டு, அரச வாழ்வைவிட்டு, மதிமுக மனைவியை விட்டு, மழலைபொழியும் மகவைவிட்டு! மகனின் இளகிய மனங்கண்டு இன்பமன்றி துன்பமேதுவும் அரண்மனைக்குள் நுழையலாகாது என்று கண்ணை இமை காப்பதுபோல, துன்பத்திலிருந்து அவனைக் காத்துவந்த தந்தை, நாட்டின் மன்னர் சுத்தோதனரைச் சோகத்தில் ஆழ்த்தி, பெற்றதாயினும் பரிவுடன் சீராட்டித் தாலாட்டி வளர்த்த சிறிய தாய் பிரசாபதியைத் தவிக்கவிட்டு, அரசையும் நாட்டையும் மணிமகுடத்தையும் அணிபணிகளையும் துறந்து, சித்தார்த்தன் வெளியேறினன். காலையில் கண்விழித்ததும் இளவரசரைக் காணுமல் மனைவி புலம்புவாள், தந்தை கலங்குவார், வளர்த்த தாய் கண்ணீர் விடுவாள், பிள்ளைக்கனியமுதாம் ராகுலன் அழுவான், அரண்மனையிலுள்ளவர்கள் துன்பமயமாவார்கள், நாட்டு மக்கள் சோகத்திலாழ்வார்கள், அவ்வளவும் ஊரைவிட்டு இரவோடிரவாக வெளியேறிச்செல்லும் இளவரசனுக்குத்தெரியாததல்ல. அவர்களெல்லோரையும் வேதனையில் ஆழ்த்தி வேடிக்கை பார்க்குமளவு கடின மனதுடையவனல்ல! நேற்று மலர்ந்த மலர் இன்று வாடிவிட்டதே! பறந்து வந்த புரு சிறகொடிந்து துடிக்கிறதே! என்று மலர் வாடினல் மனம்வாடவும், பறவை துடித்தால் அதைப்பார்க்கும் இவன் மனந்துடிக்கவுமான, இளகிய, குழைந்த மனமுடையவன்! இருந்தாலும் இவர்களுக்கப்பால் வேதனையில் துன்பத்தில் உழன்றுகொண்டிருக்கும் உலகம் இருக்கிறது! அதைக்காண, அதன் உண்மை அறிய சித்தார்த்தன் கிளம்பினன்!

சித்தார்த்தனின் மனதில் ஏராளமான புதிர்கள், விளங்காத கருத்துக்கள் சுழன்றுகொண்டிருந்தன. உலகில் ஏன் துன்பம் மிகுந்திருக்கிறது? கொடுமையும், சோகமும் வளர்வானேன்? பிறப்பில் உயர்வு தாழ்வு ஏன்? சண்டாளனுக்கும் சதுர்மறை வேதியனுக்கும் உள்ள பேதங்கள் எவை? இவற்றை அடிப்படையாகக்கொண்ட மதப்போதகங்களின் அடிப்படை என்ன? மறுபிறப்பு உண்டா? சுவர்க்கலோகம் உண்டா? கடவுள் இருக்கிறாரா, இல்லையா? இப்படிப் பலப்பல வினக்கள் புத்தரின் மனதில் மோதிக்கொண்டிருந்தன. இவைகளுக்கு அரண்மனையிலிருந்தால் விடைகாணமுடியாது என்று, அதைவிட்டு காட்டுக்குப் புறப்பட்டார், காவியுடை தரித்தார், கையில் பிச்சைப் பாத்திரத்தை ஏந்தி மனதில் பல் கேள்விகளை தாங்கி அவர் புறப்பட்டார்.

புத்தரின் காலத்தில் பிராமண சிரேஷ்டர்கள்தாம் வேதாந்திகளாகக் கருதப்பட்டார்கள்—வேத சாத்திரங்கள் படித்தவர்கள், வேதத்தின் அந்தம் தெரிந்தவர்கள், பூதேவர்கள்! எனவே உலகத்தின் உண்மையெல்லாம் கடவுள்கள் தந்த இரகசியமெல்லாம் தங்களிடம்தான் இருக்கிறது என்று அந்த பிராமண வேதாந்திகள் இறுமாப்புடன் இருந்தார்

கள், படிப்பதும், வேதாந்த விசாரணையில் ஈடுபடுவதும் அவர்களுடைய பழக்கமாக—பெருமையாக இருந்தது. உண்மையைத்தேடிக்கிளம்பிய புத்தர் முதலில் பிராமண வேதாந்திகள் **ஆரத்த காளாமன், உத்ராக ராமபுத்ரன்** என்பவர்களிடம் போய்ச் சேர்ந்தார். ஆத்மாவைப் பற்றியும், அது அடையும் பிறவி பேதங்கள் பற்றியும் அவர்கள் போதித்தார்கள். அவர்களுடைய வேதாந்தங்கள் புத்தருக்குச் சமாதானம் அளிக்கவில்லை. அவர்களுடைய மாயா வாதங்கள் புத்தருக்குப் புரியவில்லை. "பிராமணர்கள் இரவைப் பார்த்து இது பகல் என்பார்கள்; பகலைப் பார்த்து இரவு என்பார்கள். இந்த மாயவார்த்தைகள் எனக்குப் பிடிக்கவில்லை. இரவை இரவு என்றும் பகலை பகலென்றும் நான் சொல்லுகிறேன், ஒத்துக்கொள்ளுகிறேன்" என்று புத்தர் பின்பொருமுறை கூறினார். அந்த பிராமண வேதாந்திகளின் கோட்பாடுகள் சத்தற்றவைகளாயிருந்தன; பல இடங்களில் அறிவுக்குப் பொருந்திவராமல் இருந்தன. அதிகம் கேட்டால், வேதவாக்கு பிரமாவின் எழுத்து கடவுளின் மாயம் என்று வேதாந்திகள் முடித்துவிடுவார்கள். அறிவாராய்ச்சியுடன் அவை ஒத்துவரவில்லை.

வேதாந்த விசாரணையில் பலன் காணாத புத்தர், வேதக்கோட்பாடுகள் நடைமுறையில் வைக்கப்பட்டுள்ள ஆலயங்களுக்குச் சென்றார். கடவுள் சிலைகளுக்குமுன் வைக்கப்பட்ட பலி பீடங்கள் கண்டு புத்தரின் மென்மையான உள்ளம் நடுங்கியது. பிரார்த்தனைகாரர்கள் கடவுளுக்குப் பலியென்று சொல்லி ஆடுமாடுகளைக் கொண்டுவந்து பலிபீடத்தில் சாய்க்க, வேதமந்திரங்களைச் சொல்லி பிராமணப் புரோகிதர்கள் அவற்றை வெட்டி, கடவுளுக்கும் பிதுர்க்களுக்கும் படைத்தார்கள். யாகத்தின் பெயராலும், பூசையின் பெயராலும் ஆடுமாடுகள் அலறித்துடித்திடக் கொல்லப்படுவதும், சோமரசத்தைக் குடித்து மக்கள் மதிமயங்கிக் கிடப்பதும், வழக்கமாயிருந்தன. இரத்தம் சிந்திய பலிபீடமும், சோமரச வாசனை வீசும் குருமார்களும் புத்தரை ஆலயத்திலிருந்து வெளியேறச் செய்தன! "ஒருவன் மற்றொரு உயிரின் இரத்தத்தைச் சிந்துவதன் மூலம் தான் செய்த பாவக்கறையை எப்படிக் கழுவிக்கொள்ள முடியும்?" என்பது புத்தருக்குப் புரியவில்லை.

புத்தர் உண்மையைத் தேடினார், வேதாந்திகளிடம் கிடைக்கவில்லை. ஆலயங்களில் அது தவிர மற்றெல்லாம் இருந்தன. ஆனால் புத்தர் மேற்கொண்ட பயணம் முடிவடையவில்லை. காடுநோக்கி அவர்நடந்தார், உண்மையைக்கண்ட—கண்டுபிடிக்கும். தவசிகள் பலர் காடுகளில் இருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டு.

மகதநாட்டில் இருந்த **உருவில்வா** என்ற காட்டுக்குப் புத்தர்போய்ச் சேர்ந்தார். அங்கு அகோரத்தவஞ் செய்யும் பலர் இருந்தார்கள். அவர்களுடைய தோற்றமும், தவமும் பயங்கரமாயிருந்தன. சிலர் ஒற்றைக்காலில் இரவு பகலாக நின்றுகொண்டிருந்தார்கள். சிலர் முள்ளைப் பரப்பி அதன்மீது உட்கார்ந்து தவஞ்செய்தார்கள்; சிலர் சடாமுடிகளை வளர்த்து கந்தலாடையுடன் சாம்பலைப் பூசிக்கொண்டு மயானத்தில் பிணங்கள், கழுகுகள், நரிகள், பாம்புகள் இவைகளின் மத்தியில் உட்கார்ந்து சிவனின் நாமத்தைச் சொல்லிக் கொண்டார்கள்; கால்கைகள் அசைக்கவும் நீட்டவும் முடியாதபடி மரத்துப் போகுமளவு மரத்தடியில் உட்கார்ந்தபடி பலர் இருந்தார்கள், சிலர் தலைகீழாக நின்றார்கள், சிலர் தீயின் மத்தியில் உட்கார்ந்திருந்தார்கள்; தங்கள் உடல் புண்ணாகும் விதத்தில் சிலர் கல்லில் மோதிக்கொண்டார்கள், முள்ளால் குத்திக்கொண்டார்கள், தரையில் புரண்டு சென்றார்கள். அவர்கள் தங்கள் உடம்புகளுக்குக் கொடுக்காத தண்டனையில்லை, தராத துன்பமில்லை. உடலும் உணர்வும் மரத்துப் போகும்வரை அவர்கள் பாடுபட்டார்கள். எலும்புகள் முட்டி, கண்கள் மங்கி, கன்னங்கள் ஒட்டி, தோல்வரண்டு, கைகால்கள் முடங்கி கோர உருவத்துடன் அந்த முனிவர்கள் காட்சியளித்தார்கள். "உடலைவென்று, உணர்ச்சியை அடக்கி, சதையைத் தண்டித்து வந்தால்தான், துன்பத்தை அதிகமாக்கிப் பழக்கப்படுத்தினால்தான், மறுபிறவியில் இன்பம் உண்டாகும்" என்று தவசிகள் நம்பினார்கள். அவர்களுடைய உறுதி புத்தரை ஆச்சரியத்திலாழ்த்தியது. புத்தரும் அவர்களைப் போலத் தவஞ்செய்ய ஆரம்பித்தார்.

உருவில்வா காட்டில் புத்தர் ஆறுஆண்டுகள் தவசிகள் முறையில் இருந்தார். உணவைக்குறைத்தார், உடலைக் கடினப்படுத்தினார், ஆந்தையும் நரியும் அலறிடும் குகையில் படுத்துக்கிடந்தார், இரவு பூராவும் கண்விழித்துத் தவஞ்செய்தார், பட்டினிக்கிடந்தார், அசையாமல் நாட்கணக்கில் உட்கார்ந்திருந்தார். மற்றவர்கள் கண்டு வியக்கும் வகையில் உடலை மிகக் கட்டுப்படுத்தி அவர் இருந்தார். வரவர உணவைக்குறைத்து,

நாளுக்கு ஒருவேளை மட்டும்—அதுவும் கந்த மூலாதிகளை உண்டுவந்தார். ஒருவேளை உணவுக்குப்பின் கற்பாறையில்போய் தியானத்தில் அமர்ந்துவிடுவார், ஆறு ஆண்டு தவக்கோலத்தின் பலனாய் அவர் உடல் இளைத்து எலும்புக்கூடாகியது.

ஆறு ஆண்டுகள் தவசிகளுடன் இருந்தும், அவர்கள் சொல்லும் வகையில் கடுமையான தவங்களைச் செய்தும் புத்தரின் மனம் அமைதி அடையவில்லை, அவர் தேடிவந்த உண்மைகள் கிடைக்கவில்லை. உடல் சுருங்கியது, மார்பு எலும்புகள் முட்டிக்கொண்டு தெரிந்தன, கையும் காலும் குச்சிபோலாயின. இலையுதிர்ந்த மரக்கிளையைப்போல, ஆயிற்று அவர் உடல்! இருந்தாலும் தவமுறையில் சிறந்து, உண்மையைக் கண்டுபிடித்துவிட வேண்டுமென்ற ஆவலில், உடல் இளைத்தாலும் உள்ள உறுதி குலையாமல், புத்தர் முன்னைவிட அதிகக்கட்டுப்பாடுடன், உடலை வாட்டிக்கொண்டார்.

ஒருநாள் ஆற்றில் நீராடச்சென்ற புத்தர், அதில் அமிழ்ந்ததும் எழுந்திருக்க முடியாமல் தவித்தாராம். அந்த அளவு உடல் பலமற்று இருந்தது. ஆற்றுநீரில் மிதந்துசென்று, தண்ணீருடன் தாழ்ந்திருந்த மரக்கிளையைப்பிடித்து பின் நிமிர்ந்து நின்று கரையில் ஏறிக்கொண்டாராம், ஒரு கம்பை ஊன்றிக்கொண்டு மெதுவாகத் தட்டுத்தடுமாறிக் குகையை நோக்கிப் புத்தர் நடந்தார். சிறிதுதூரம் சென்றதும், பலவீனத்தால் மூர்ச்சையாகிக் கீழே விழுந்துவிட்டார். சிறிது நேரம் அப்படியேவிடப்பட்டிருந்தால், அவருடைய உயிர்பிரிந்திருக்கும், நற்காலமாக அந்தப் பக்கம் வந்த இடையர் குலப்பெண், அவருடைய முகத்தில் தண்ணீர் தெளித்து, தன் கலயத்திலிருந்த பாலுஞ்சோறுங்கலந்த கஞ்சியை அவருடைய வாயில் ஊற்றினாள். புத்தர் மூர்ச்சை தெளிந்து தன் குகையை நோக்கி நடந்தார்.

உடலை வருத்திக்கொண்டால், உண்மையைக் காணும் பக்குவத்தை உள்ளம் பெற்றுவிடுகிறதா? புத்தருக்குச் சிறு சந்தேகம் வந்தது. குகைக்குள்போய், தவத்தில் அமராமல் வெளியில் மரத்தடியிலிருந்த பாறையின் மீது அவர் உட்கார்ந்து யோசித்தபடி இருந்தார். ஆறு ஆண்டுகளாகச் செய்துகொண்ட கொடுமைகளெல்லாம் வீண் என்று தோன்றியது.

தவத்தில் ஈடுபடாமல் புத்தர் சிந்தனையுடன் உட்கார்ந்திருப்பதைப் பார்த்ததும், மற்ற தவசிகளுக்கு அவர் மீது சந்தேகம் உண்டானது. அதிலும், ஆற்றங்கரையில் ஒரு பெண், அவர் முகத்தைத் துடைத்து அவருடைய வாயில் பாற்சோறை ஊட்டியதைப் பார்த்தார்கள். இப்பொழுது தியானத்தில் அமராமல், மரத்தடியில் கவலையுடன் உட்கார்ந்திருக்கும் புத்தரைப் பார்த்ததும் அவர்கள் தங்களுக்குள் பேசிக்கொண்டார்கள். "பெண்ணைத் தொட்டுவிட்டான், பெண்ணாசையால் இவன் மனம் மயங்கிவிட்டது. அதிலும் கந்த மூலாதிகளைமட்டும் உண்ண வேண்டியவன் பாலும் சோறும் உண்ணலாமா?" புத்தருடைய கவலையின் காரணம் அவர்களுக்குத் தெரியாது. பெண்தந்த மயக்கமென அவர்கள் நிச்சயித்துக்கொண்டு, பழையபடி காலை மடக்கியோ, தலைகீழ் நின்றோ, முள்மீதுபடுத்தோ, தியானம் செய்யச் சென்றார்கள். இந்த இடைக்குலப்பெண்ணைவிட அழகுமிக்க அரசகுமாரியைவிட்டுப் பிரிந்து புத்தர் வந்திருப்பது அவர்களுக்குத் தெரியாது.

புத்தர் சோர்வுடன் உட்கார்ந்திருக்கும் பொழுது, அந்தவழி ஆட்டுமந்தை ஒன்று புழுதி எழுப்பிக்கொண்டு வந்தது. புத்தரின் கவனம் ஆட்டுமந்தைப்பக்கம் திரும்பியது. ஆடுகள் அடர்ந்து, ஒலிசெய்தவண்ணம் கடந்து சென்றன. சில ஆடுகள் கூட்டத்தை விட்டு விலகி ஓடின. ஆட்டிடையன், சத்தமிட்டும், கோல்கொண்டு மறித்தும் தட்டியும் தனித்தனி விரட்டியும் சிதறிச்செல்லும் ஆடுகளை மந்தையுடன் சேர்த்துவந்தான். ஒரு தாய் ஆடு இரண்டு குட்டிகளுடன் அந்தக் கூட்டத்தில் இருந்தது. ஒரு குட்டிக்குக் காலில் காயம்பட்டு, நடக்கமுடியாமல் பின்னால் நொண்டிக்கொண்டு வந்தது. மற்றொரு ஆட்டுக்குட்டி துள்ளி முன்னால் ஓடியபடி இருந்தது. பின்னால் தங்கிய ஆட்டுக்குட்டியைப் பார்க்கவும் முடியாமல், முன்னால் ஓடும் ஆட்டுக்குட்டியை பிடிக்கவும் முடியாமல் தாய் ஆடு இரண்டுக்குமிடையில் தவித்தது. இடையனோ எல்லா ஆடுகளுடன் அதையும் சேர்த்து விரட்டியபடி இருந்தான். அடிபட்ட ஆட்டுக்குட்டி நடக்கமுடியாமல் விழுந்தது. தாய் ஆடு அலறிக்கொண்டு நின்றது. புத்தரால் இந்தக்காட்சியைப் பார்த்துக்கொண்டு சும்மா உட்கார்ந்திருக்க முடியவில்லை. ஓடிப்போய், காலொடிந்த ஆட்டுக்குட்டியைக் கையில் தூக்கிக்கொண்டார்.

இவற்றையெல்லாம் விழித்துப்பார்த்தபடி மரத்தடியில் முனிவர்கள் உட்கார்ந்திருந்தார்கள்.

(அடுத்த இதழில் முடியும்)

(43)

இலட்சுமியை நதியாகச் சபித்தும், சரசுவதியின் கோபம் அடங்கவில்லை. விட்டுணுவிடம் சரசமாடிக்கொண்டிருக்கும் கங்கையைப் பார்த்து "நீ பூலோகத்தில் ஒரு நதியாகப் போகக்கடவது!" என்று சரசுவதி சாபந் தந்தாள்.

சாபத்தைக்கேட்டுக் கங்கை பேசாமலில்லை. "எதிர்சாபமாக நீயும் ஒரு நதியாகப் போவாய்!" என்று சாபங்கொடுத்தாள்.

விட்டுணுவின் மூன்று மனைவிகளும் லட்சுமி, சரசுவதி, கங்கை மூவரும் இப்படிச்சாபமிட்டுக்கொண்டார்கள். சாபத்தின் பலனாக, மூன்று விட்டுணு பத்தினிகளும் நதிகளாக உருமாறி, பூலோகத்தில் பாய்ந்தனர். கங்கை, சரசுவதி, லட்சுமி மூன்றும் ஆரியவர்த்தத்தில் ஓடிய நதிகளின் பெயர்களாயின.

பூமியில் ஓடிவந்த கங்கை, சந்தனு என்ற மன்னனைக்கண்டு, அவனுடைய விருப்பத்துக்கு இணங்கினாள். இருவருக்கும் பீஷ்மன் பிள்ளையாகப்பிறந்தான். பின் பாரதகுலம் விரிவடைந்தது.

பாகவதத்தில் முதலில் சரசுவதி விட்டுணு பத்தினியாக இருந்து, பின் பிரமபத்தினியாக ஆனதை முதலில் குறிப்பிடப்பட்டது. அது போல் முதலில் விட்டுணுபத்தினியாக இருந்த கங்கையும் கடைசியில் பிரமபத்தினியாக ஆனாள். பின் சிலகாலம் வருணனின் பத்தினியாகவும் கங்கை இருந்திருக்கிறாள். விட்டுணு பத்தினியாக இருந்த கங்கை, சரசுவதி சாபத்தில் நதியாகமாறி ஓடிக்கொண்டிருந்தாள். அப்பொழுது அவளைப்பார்த்து கோபங்கொண்ட பிரமதேவர் தண்ணீராக இருக்கும் அவளை ஒரு கமண்டலத்துக்குள் அடைத்து, பிரமலோகம் எடுத்துக்கொண்டு போனார். கங்கையைப் பிரமதேவர் வைத்திருப்பது தேவலோகத்தில் பலருக்குத் தெரியாது. கமண்டலத்தைப் பக்கத்தில் வைத்தபடி, பிரமதேவர் மிக உருக்கத்துடன் தியானத்தில் இருப்பார், வேதங்களை உச்சரிப்பார் மற்றவர்கள் சென்றதும், இரவுநேரம் அண்மியதும், கமண்டலத்தை எடுத்துக்கொண்டு, பிரமன் தன் மஞ்சத்துக்குப்போவார். கமண்டலத்தில் அடைப்பட்டிருக்கும் பெண்ணை அழைப்பார். பெண் வருவாள். பிரமா கங்கையை அணைத்துக் கொள்வார், குளிர்ச்சிபெறுவார்......

பிரமாவின் தந்திரம் பலருக்குத் தெரியாமலிருந்தது. திரிலோக சஞ்சாரியான நாரதர் மட்டும் கண்டுபிடித்துவிட்டார். பிரமாவின் பிள்ளையல்லவா அவர்! தந்தையின் போக்கு தனயனுக்குத்தெரியும். பிரமதேவர் அளவுக்குமீறிய அமைதியுடன் வேதங்களைப் படித்தும், தவஞ்செய்வதையும் பார்த்ததும், ஏதோ மறைவாக நடைபெறுகிறது என்பதைக் கண்டுகொண்டார். பிரமாவைத்தவிர வேறு யாருமில்லாதபொழுதும் பெண்வாடை அடிப்பது, "பிரமசாரியான" நாரதருக்குத் தெரிந்ததாம். கடைசியாக கமண்டலத்தில் ஒருபெண் அதுவும் கங்கை இருப்பதை தனது முக்காலக்கண்ணால் பார்த்தார். வழக்கம்போல் தந்தையை வலம்வந்து, நாரதமுனி தயங்கிக்கொண்டு நின்றார்.

பிரமா தனது புத்திரனைப்பார்த்தார். "ஏ, நாரதனே! ஏன் நின்றுகொண்டிருக்கிறாய்?

உந்து திரிலோக சஞ்சாரத்தை ஆரம்பிக்க வில்லையா?''

"பிரபு! சிருட்டியின் பிதாவே! எனக்கு ஒரு சிறு சந்தேகம் வந்துள்ளது!''

"அப்படி என்ன சந்தேகம், மற்றவர்களால் தீர்க்கமுடியாத அளவுக்கு?''

"வேதசாத்திரங்களையெல்லாம் உண்டாக்கியவர் தாங்கள். உங்களுக்கு சந்தேகங்கள் வரவில்லை. திரிலோக சஞ்சாரியான எனக்கு அரைகுறை ஞானத்தால் அடிக்கடி சந்தேகங்கள் உண்டாகிவிடுகின்றன''

"சீக்கிரம் சொல்! எனக்கு வேறுவேலைகள் இருக்கின்றன. ஏகாந்தமாய் சிறிது நேரம் தியானத்தில் இருக்கவேண்டும்'' பிரமா கமண்டலத்தை இழுத்து அருகில் வைத்துக் கொண்டார். கமண்டலத்தை நாரதர் கவனித்தார். பிரமாவின் "ஏகாந்த தியானத்துக்கு'' கமண்டலம் அவசியம் என்பது நாரதருக்குத் தெரியும்.

நாரதர் மிக வினயத்துடன் கேட்டார் "உலகில் அடங்கிக்கிடக்கும் ஆத்மாக்கள் விடுபடுவது எவ்வாறு?''

"பாபங்களைப்போக்குவதால், புண்ணிய காரியங்களைச்செய்வதால், தெய்வப்பிரதியாக நடந்துகொள்வதால்! வேதசாத்திரங்களைப் படித்த உனக்கா இந்தச் சந்தேகம் வந்தது?''

"தெரிந்ததுதான். இருந்தாலும் ஓரிரு தடவைகள் வேதசாத்திரங்களில் கூறியபடி நடக்காவிட்டால், சந்தேகம் வரத்தான் செய்கிறது.''

"எங்கே நடக்காமல் போய்விட்டது?''

"உலகில் பாபங்களைப்போக்குவதே தொழில், தொட்டால் புண்ணியம், தெய்வப்பிரதியாக நடந்துகொள்வதிலும் தவறில்லை. அவ்வளவிருந்தும் அந்த ஆத்மா அடைபட்டுக் கிடக்கிறது''

"உலகத்தில் அடைபட்டுக்கிடந்தால்...'' பிரமதேவர் முடிக்கவில்லை. அதற்குள் நாரதர் இடைமறுத்து, "உலகத்தில் அடைபடவில்லை. உலகம்மாவது மிகப்பெரிய இடம். மிகச்சிறிய கமண்டலத்தில் அடைபட்டுக்கிடக்கிறது ஒரு ஆத்மா! அது என்ன பாவம் செய்தது.''

"யாரைப்பற்றிச் சொல்கிறாய்?'' பிரமா பதட்டமடைந்தார்.

நாரதர் மிக அமைதியுடன், "நான் யாரைப் பற்றிச்சொல்லுகிறேன் என்பது உங்களுக்கும் தெரியும். தெய்வப்பிரதியாக அவள் நடந்து கொள்ளுகிறாள். அவளுக்குக் கமண்டல வாசம்! ஏன் இந்தத்தண்டனை!''

"உனக்குத் தெரியுமா?''

"எனக்குமட்டும்தான் தெரியும்! கங்கை உங்கள் கமண்டலத்துக்குள் அடைபட்டுக் கிடக்கிறது''

"இந்த இரகசியத்தை யாரிடத்திலும் சொல்லிவிடாதே!'' அதிகாரம் வேண்டுதல் இரண்டும் கலந்திட பிரமா நாரதரைக்கேட்டுக் கொண்டார்.

நாரதர்சிரித்தார். "பிரபு! இரகசியம்என்பது எதுவும் என்னிடம் இரண்டு நாழிகைக்குமேல் இருக்கமுடியாது. ஆதலால், நான் யாரிடத்திலும்போய் சொல்வதற்குள், இந்த இரகசியத்தை நீங்களாக வெளிப்படுத்திவிடுங்கள்.''

"எப்படி!''

"கங்கையை பிரமபத்தினிகளில் ஒருத்தியாக ஏற்றுக்கொள்ளுங்கள்.''

"ஆனால், அபவாதம்...''

"ஒன்றும் வராது. வந்தாலும் பாதகமில்லை.'' நாரதர் தைரியங்கொடுத்தார்.

கமண்டலத்திலிருந்த கங்கையை பிரமா வெளிவரச்செய்தார், பின் ஏகாந்த தியானத்திற்கு இருவரும் போனார்கள். நாரதர் கானம் செய்தபடி, வெளியேறினார்.

கங்கை முதலில் விட்டுணு பத்தினியாக இருந்தவள். பின், விட்டுணுவின் குமாரரான பிரமதேவருக்குப் பத்தினியானாள். தெய்வப் பிரியான—தெய்வங்களுக்குப் பிரியான காரியங்களை அவள் செய்தாள்.

நாரதர்

பிரமாவின் மானசபுத்திரர்களில்—அதாவது மானசீகமாக உண்டான மக்களில், நாரதர் ஒருவர். நாரதரைப்போன்று மானசிகமாக பிரமருக்குப் பிறந்த மற்ற பிள்ளைகள் சநகர், யதி, சனத்குமாரர், சனந்தர், குபன், சநாதனர், அம்சன், அருணி முதலானோர்.

பிரமாவின் புத்திரனாகப் பிறந்தபோதிலும், நாரதருக்கு பிரமசபைக்குள்வர அனுமதிதரப் படவில்லை. ஏனென்றால், வேதாகமங்கள் தெரிந்தவர்களும், நீண்டகாலம் தவஞ்செய்து சிறப்படைந்த முனிவர்கள் மட்டுமே சத்திய லோகத்திற்கு அழைக்கப்படுவார்களாம். பிரமசபைக்குப் போகவேண்டுமென்ற ஆவலுடன், நாரதர் தவக்கோலத்துடன் காட்டிற்குப்போய் தவஞ்செய்ய ஆரம்பித்தார். ஆயிரம் ஆண்டுகள் கடுமையாக அவர் தவமிருந்ததும், பிரமா தோன்றி, பிரமசபை காணும் வாய்ப்பை நாரதருக்கு அருளினராம். சத்தியலோகம்வந்து, பிரமசபையில் அங்கம் வகிக்கும் உரிமை நாரதருக்குக்கிடைத்தது.

அப்பொழுது கடுந்தவத்திற்குப்பின் அவர் வந்ததால், நாரதமுனி என்ற பட்டத்துக்கு மட்டும் அவர் உரியவனுர். யாழ்மீட்டுவதும், கானம் செய்வதுமான நாரதர் பின்பு வந்தார்.

ஒருசமயம் வைகுண்டத்தில் இருக்கும் திருமாலைப்பார்க்க நாரதர் சென்றிருந்தாராம். இவர் சென்றபொழுது திருமால் சபையில் பாட்டுக்கச்சேரி. என்றுமில்லாதவாறு கூட்டம் அதிகமாயிருந்தது. நேரங்கழித்துவந்த நாரதரை, வெளியில் காவற்காக்கும் துவார பாலகர்கள் உள்ளே அனுமதிக்கவில்லை. பாட்டுக்கச்சேரிக்குப்போக, காவற்காரர்கள் அனுமதிக்கவில்லையென்றதும், நாரதருக்கு வெட்கமும் துக்கமும் உண்டாயின. சிருட்டிகர்த்தாவான பிரமனுக்கு மகனுயிருந்தால் கூட, வைகுண்டத்தில் யாரும் மதிப்பதாகக் காணோம், யாரோ பாட்டுப்பாடும், தும்புரு வைச்சுற்றி கூட்டம் இருக்கிறது. எனவே பாட்டுப்பாடத் தெரிந்துகொள்ளவேண்டுமென்ற உறுதியுடன் நாரதர் வெளியேறி, திருமாலைநோக்கித் தவஞ்செய்தார். மிகக் கடுமையான தவத்துக்குப்பின், விட்டுணு நேராகத்தோன்ருமல், அசரீரியாக வந்து "நாரதனே! என்னவேண்டும்?" என்று கேட்டார்.

"இசைப்புலமை எனக்கு வேண்டும்!" என்று நாரதர் ஆகாயத்தைப்பார்த்துக் கூறினுர்.

"கானவிந்து என்ற திருமாலடியான் இசையில் புகழ்பெற்றவன். அவனிடம் நீ போ!"

விட்டுணுவின் கட்டளைப்படி நாரதர், கானவிந்துவிடம் கற்று, பின் வைகுண்டத்திலிருக்கும் தும்புருவிடம் வந்து மாணவனுக இருந்து, நாரதர் இசைகற்றுர். நாரதர் வீணை வாசிப்பதில் வல்லவரானுர். அவர் வைத்திருந்தது மகதி வீணை என்பதாகும். நாரதர் பிரமசாரியாக இருந்தபோதிலும், தமது இசை வலிமையால் பலபெண்களை மயக்கித்தம்வசப் படுத்தியிருக்கிறுர்.

பிரமசபையில் ஒருநாள் அரம்பையின் நடனம் இருந்தது, பிரமா, பிரமபுத்திரர்கள், முனிபுங்கவர்கள் எல்லோரும்கூடி, நடனக்கலையின் நுட்பத்தை, நடனமாடும் மங்கையின் திட்பத்தை ஆராய்ந்து இரசித்துக்கொண்டிருந்தார்கள். பிரமாவும், சத்தியலோக முனிவர்களுக்கும் வேதாந்தங்களைப்பற்றிய ஆராய்ச்சியில் இருப்பதுதான் முக்கிய வேலை, இருந்தாலும் தேவமாதர்களின் ஆடல் பாடல் என்ருல் மற்ற வேலைகளுக்குச் சிறிது ஓய்வு அளித்துவிட்டு, நடனத்தைக் கண்டு களிப்படைவார்கள். அரம்மை, மிக அழகுடன் ஆடினுள், பாடினுள். முனிவர்கள் இதற்குமுன் அரம்பை போலப் பல பெண்களைப் பார்த்திருக்கிருர்கள். ஆனுல் நாரதனுக்கு எல்லாம் புதுமையாக இருந்தது. அரம்பையின் ஆட்டத்தைப் பார்க்க, பார்க்க அவன் உடல் புல்லரித்தது. ஆட்டமாடுபவளின் கைவளைவிலும், இடை நெளிவிலும், கால் அசைவிலும், கண் வீச்சிலும் அப்படியே சொக்கிப்போய், தேன்கூட்டைப் பார்த்து இளித்திடும் நரிபோல நாரதர் பார்த்தபடி இருந்தார். தந்தையான பிரமன் நாரதரை தட்டிக்கொடுத்தார். மிகப்பலர் கூடியிருக்கும் சபையில் நாரதரின் பார்வை பண்பற்றதாக இருந்தது. நாரதர் நிமிர்ந்து உட்கார்ந்து, சிறிதுநேரம் முகத்தைக் கடுமையாக வைத்துக்கொண்டார். ஆனுல் மறுபடியும் கண்கள் பார்த்தன, உடல் தளர்ந்தது, அரம்மையின் அங்க அசைவுகள் நாரதரின் உடலை அசைத்தன, அவர் மனதில் காமம்கொழுந்து விட்டெரிந்தது. நாரதரின் பரிதவிப்பைப் பார்த்தால், சிறிதுநேரம் போனதும் பிரமசபையென்றும் கவனிக்காமல் அரம்பையின் அருகே சென்ருலும் சென்று விடுவார்.

காம விகாரத்துடன் உட்கார்ந்திருக்கும் நாரதரைப் பாத்ததும் பிரமாவுக்குக் கோபம் வந்தது, "பிரமசபையைவிட்டு நீ பூலோகத்தில் மனிதராகக் கடவாய்" என்று சாபமிட்டார். நாரதரைவிட அதிகக் காமவெறியுடன் பிரமா இருந்திருக்கிருரென்ருலும், மற்ருெருவனிடம் அந்தக் குற்றத்தைக் காணும்பொழுது கோபம் வந்தது, சாபங்கொடுத்தார். நாரதர் மனிதராக இருந்து, பின் சத்தியலோகம் மீண்டும் சென்ருர்.

சத்தியலோகத்தைவிட்டு வெளியேறும்படி நாரதருக்கு 'மற்ருெருமுறை உத்திரவுவந்தது. முன்போன்ற காமக்குற்றத்தால் அல்ல. அதற்கு நேர்மாருன குற்றத்தால்! வேதங்களை அதிகம் படித்துவிட்ட நாரதர் மற்ற பிரம புத்திரர்களை தம்முடன் வைத்துக்கொண்டு அவர்களுக்கு தவஞ் செய்வதின் அருமை பெருமைகளைப் போதிக்க ஆரம்பித்தார். காம மோகத்தில் வீழ்ந்து கிடக்க வேண்டிய அவர்கள், நாரதரின் அரிய முயற்சியால், நல்வழிப் பட்டார்கள். அதுமட்டுமல்ல, முற்றுந்துறந்த முனிவர்களாகி, பிரமசபையைவிட்டு வெளியேறி, தவஞ்செய்யக் காட்டுக்குப் போய்விட்டார்கள், பிரமபுத்திரர்கள் பிரமசபையைவிட்டுப்போனது, பிரமாவிற்கு வருத்தத்தைத்தந்தது. அவர்கள் தவசிகளானதற்குக் காரணம் நாரதர் என்பது பிரமாவிற்குத் தெரிய வந்தது. "நல்ல காரியம் செய்துவிட்டோம். இந்தத் தடவை தந்தை நம்மைப் போற்றுவார்',

என்று பெருமைப்பட்டிருந்த நாரதர், பிரமா கோபத்துடனிருக்கிறார் என்று கேள்விப்பட்டதும் ஆச்சரியப்பட்டார். கெடுதல் செய்தாலும் தண்டனை, நல்லது செய்தாலும் தண்டனை ஒன்றும் புரியவில்லையேயென்று நாரதர் மயங்கினார்.

"துரோகி! பிரமபுத்திரர்களைத் தவசிகளாக்கி, விரட்டிய நீ என் முன் நிற்காதே போ! இந்த உலகத்தைவிட்டுக் கந்தருவ லோகத்துக்குப் போகக்கடவாய்!" என்று பிரமா சாபங் கொடுத்தார்.

நல்லது செய்ததற்கு இவ்வாறு அநீதி வழங்குகிறாரேயென்று நாரதருக்கும் கோபம் வந்தது. "குற்றஞ்செய்யாத எனக்குச் சாபந் தந்த உங்களுடைய மந்திரங்கள் ஒன்று பலிக்காமற் போகக்கடவது! உலகத்தில் உங்களை யாரும் வணங்காமற் போவது!" என்று பதிலுக்கு நாரதரும் சபித்தார்.

சத்தியலோகத்தைவிட்டுக் கந்தருவலோகம் வந்தது நாரதருக்குத் தண்டனையாக இல்லை. ஆடல் பாடல்கள் சத்தியலோகத்தில் அபூர்வம். வேதச் சத்தம் ஒன்றுதான் எப்பொழுதும் ஒலித்துக்கொண்டிருக்கும் காந்தருக லோகத்தில் அப்படியில்லை. ஆடல், பாடல் அதிகம். கானத்திற்குப் பேர்போன இடம். அதிலும் காந்தருவ மாதர்கள் இசைக்குப் பெயர் பெற்றவர்கள். காந்தருவகானம் என்பதை நாரதர் நேரில் அனுபவித்தார். நாரதரின் கானத்தைக் கேட்டு, காந்தருவர்களும் பாராட்டினார்கள்.

நவப்பிரசாதிபதிகள் என்பவர்கள்—பிரமாவின் பேரப்பிள்ளைகள்—யாகம் ஒன்று நடத்தினார்கள். யாகத்திற்கு நாரதரும் சென்றிருந்தார். மற்றவர்கள் யாகத்திலீடுபட்டு வேதவொலிகளை எழுப்பிக்கொண்டிருக்கும்பொழுது நாரதர்மட்டும் தனியாக அமர்ந்து தமதுவீணை மீட்டிப் பாடிக்கொண்டிருந்தார். யாகத்திற்குக் காந்தருவர்களும் காந்தருவ மாதர்களும் வந்திருந்தினர். நாரதரின் கானம் காந்தருவர் பெண்களை ஈர்த்தது. நாரதர் யாகசாலையை விட்டு, பக்கத்திலிருந்த காட்டுக்குள் சென்றார். காந்தருவப் பெண்களும் நாரத கானம்போகும் வழியில் தொடர்ந்து சென்றார்கள்.

காட்டில் பாட்டு தொடர்ந்தது, நாரதர் வீணை மீட்டிப் பாட, காந்தருவ மாதர்கள் ஆடினார்கள் நாரதரின் கானம் கள்ளைப்போல், கேட்பவர்களுக்கு மயக்கத்தைக் கொடுத்தது, அதேசமயம் வெறியைக் கொடுத்தது. நாரதருடைய பாட்டில் மயங்கி, பெண்கள் அவரைச் சூழ்ந்து, ஆடினார்கள், பாடினார்கள், ஆடை அணிகள் சோர்ந்து விழும்வரை.

கால்கள் தடுமாறின, குரல்கள் தழதழத்தன. ஆடுபவர்கள் சோர்ந்து விழுந்தார்கள். பாடல் நயம்போய், காமவெறி நாரதரின் பாட்டில் கலந்தது. காந்தருவப் பெண்கள் அவரைச் சூழ்ந்தனர். காடு காமனின் களமாகியது.

யாகசாலையில் கூக்குரல் எழுந்தது. யாகத்தில் ஈடுபட்டிருந்த காந்தருவர்கள் தமது மனைவி, மக்களைக் காணாமல் தேடினார்கள். யாகம் தடைப்பட்டது. யாகக்குண்டத்தைக் கவனித்துக்கொண்டிருந்த கண்கள், யாகத் தீ அனைவதையும் பார்க்காமல் பெண்களைக் தேடிக்கொண்டிருந்தன. "நாரதரைக் காணோம்!" ஒருவன் சத்தமிட்டான். நாரதர் வந்து ஒருபுறத்தில் உட்கார்ந்து பாடிக்கொண்டிருந்தது அவர்களுக்கு ஞாபகம் வந்தது. நாரதரையும் சேர்த்து அவர்கள் தேட ஆரம்பித்தார்கள்.

மாளிகையில், சோலையில், ஊரில் எங்கும் காந்தருவப் பெண்களைக் காணோம். தேடித் தேடி காந்தருவர்கள் சலித்துப் போனார்கள்.

"காட்டில் நாரதரும் மற்றவர்களும் பாடிக் கொண்டிருந்தார்கள்!" காட்டு வழியாக வந்த வழிப்போக்கன் சொன்னான்.

"மற்றவர்கள் யார்?"

"அழகான பெண்கள்!"

மறுபேச்சு கேட்காமல் காந்தருவர்கள் காட்டுக்குள் வந்தார்கள். கடைசியாகக் கண்டனர், சூறைக்காற்றில் சிக்கிச் சிதறிக்கிடக்கும் தளிர்களை! துவண்டு, அலங்கோலமான நிலையில், காந்தருவ மாதர்கள் காம வார்த்தைகளைப் பிதற்றிக் கொண்டிருந்தனர். பிரமபுத்திரரான நாரதர் பிரேமை கானம் பயின்றுகொண்டிருந்தார் ஒரு பெண்ணுடன்.

காந்தருவர்கள் கோபித்தனர், குதித்தார்கள்; தமது பெண்களைத் தேடிப்பிடித்து வசைமாறி பொழிந்தார்கள்.

யாகம் நின்றுவிட்டது. யாகத்தை நடத்திய நவப்பிரசாபதிகளுக்கு நாரதரின்மேல் கோபம் வந்தது "காமதாரியாக இருந்த நீ சூத்திரனாகப்பிறந்து, துன்பமடைக!" என்று சபித்தார்கள். வேதாகமங்களில் சூத்திரன் மிக இழிந்த பிறப்பென்று நம்பப்பட்டது.

நாரதர் பூலோகத்தில் நாலாம் சாதியில் பிறந்து, முனிவர்களுக்குப் பணிவிடைசெய்து, மீண்டும் சத்தியவுலக்குக்கு வந்தார்.

பிரிந்து செல்லும் வல்லமை உண்டோ?

[இரா. நெடுஞ்செழியன்]

திருமணம் முடிந்து சில திங்கள்களே கழிந்திருக்கின்றன. தலைவனும் தலைவியும் இன்பக் கடலில் மூழ்கிக் கிடக்கின்றனர்.

காதலரிருவரும் கவலையற்ற வாழ்வுவாழ்ந்து வந்த காரணத்தால், காலங் கழிவதும், கைப் பொருள் கரைவதும் அவர்களுக்குத் தெரியவில்லை. கைப்பொருள் முழுவதும் கரைந்து, பொருள் முட்டுப்பாடு ஏற்படுகிறது. மேற் கொண்டு இல்லற வாழ்வை இனிது நடத்த, மிகுபொருள் வேண்டும் என்பதைத் தலைவன் உணருகிறான். வெளியூருக்குச் சென்று வாணிகமோ அல்லது தொழிலோ செய்தால்தான் பொருள் ஈட்ட முடியும் என்று எண்ணமிடுகிறான். இந்த எண்ணத்தைத் தலைவியிடம் எப்படிக் கூறுவது, கூறினால் அவள் மிகமிக வருந்துவாளே என்று நினைந்து நினைந்து மனங்கலங்கி, ஏதொரு முடிவுக்கும் வர முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறான்.

வேறு வழி ஏதும் புலப்படாததால், இறுதியாகப் பொருள் தேட வெளியூருக்குப் புறப்படுவது என்ற முடிவுக்குத் தலைவன் வருகிறான். இந்த முடிவைத் தலைவியிடம் நேரிடையாகச் சொல்ல மனந்தாளாமல், தோழியின் மூலம் அறிவிக்கலாம் என்று கருதுகிறான். அதற்காகத் தோழியைத் தேடிக்கொண்டு செல்கிறான். தோட்டத்தின் ஒருபுறத்தில் தோழி தன்னந்தனியாக இருப்பதைக் கண்டு அவளிடம் நெருங்குகிறான். தலைவனைக் கண்டதும் தோழி எழுந்து நின்று வரவேற்கிறாள்.

தலைவன்: "எங்கே வந்தாய்? ஏன் இங்குத் தன்னந்தனியாக இருக்கிறாய்?"

தோழி: "மல்லிகை பறித்தேன்; மாலை தொடுத்துக்கொண்டிருக்கிறேன்!"

தலைவன்: "உன்னுடைய தோழி எங்கே?"

தோழி: "அவள் மாளிகையில்தான் இருப்பாள். நீங்கள் அவளைப் பார்க்கவில்லையா?"

தலைவன்: "நான் இன்னமும் மாளிகைக்குப் போகவில்லை. இப்பொழுதுதான் நான் காடு கழனியைப் பார்த்துவிட்டு வருகிறேன்."

தோழி: "நீங்கள் மாளிகைக்குப் போகாமல் இங்கே எது பொருட்டு வந்தீர்கள்?"

தலைவன்: "நீ இங்கே இருப்பதைப் பார்த்தேன். உன்னோடு பேசலாம் என்று வந்தேன்."

தோழி: "என்னோடு என்ன பேசப் போகிறீர்கள்? பேசவேண்டிய எல்லாவற்றையுந் தாம் உங்கள் திருமணத்திற்கு முன்னால் பேசி விட்டீர்களே!"

தலைவன்: "உன்னால் எனக்கு ஒன்று ஆக வேண்டியிருக்கிறது."

தோழி: "ஆகவேண்டிய எல்லாவற்றையுந் தாம் திருமணத்திற்கு முன்னால் உங்களுக்குச் செய்துவிட்டேனே! இப்பொழுது புதிதாக நீங்கள் சொல்ல வேண்டியதும், நான் செய்ய வேண்டியதும் என்ன இருக்கிறது?"

தலைவன்: "நீ தலைவியிடம் தூதுபோய் அவ்விடம் ஒன்று சொல்லவேண்டியிருக்கிறது!"

தோழி: "நான் தூதுபோய்ச் சொல்ல வேண்டியது என்ன இருக்கிறது?"

தலைவன்: "நான் பொருள்தேட வெளியூருக்குப் புறப்படலாம் என்றிருக்கிறேன். அதற்கு நீ தலைவியினுடைய இசைவைப் பெற்றுத் தரவேண்டும். அதைச்சொல்லி

விட்டுப் போகத்தான் உன்னிடம் வந்துள்ளேன்.''

தோழி: "நிலையில்லாத பொருளைத் தேடுவதிலே உங்களுக்கு ஏன் இவ்வளவு இளவயதில் ஆவல் பிறந்துவிட்டது?''

தலைவன்: "பொருள் நிலையில்லாததாக இருந்தாலும், வாழ்வு அதில்தானே நிலைத்திருக்கிறது?''

தோழி: "அவளைவிடப் பொருள் உங்களுக்குப் பெரிதாகப் போய்விட்டதா?

தலைவன்: "அவளை பெரிதாகக் கருதுவதால்தான், பொருள் தேடும் முயற்சியில் நான் ஈடுபட வேண்டியவனாக இருக்கிறேன். அவனோடு சேர்ந்து நடத்தும் இல்லற வாழ்வை நான் இனிதாக நடத்திச்செல்ல வேண்டுமானால், அதற்கு உறுதுணையாக இருக்கும் பொருளைத் தேடித்தான் ஆக வேண்டியிருக்கிறது.''

தோழி: "இதைத் தலைவியிடம் நீங்களே நேரிடையாகச் சொல்லுங்களேன்?''

வலைவன்: "நான் நேரிடையாக அவளிடம் சொல்ல முடியாமையினால்தானே, உன்னிடம் இரந்து கூறுகிறேன். நான் அவளிடம் இதனைக் கூறினால், அவள் மிகவும் துன்பமுறுவாள். அவளுடைய துன்பத்தைப் பார்த்த பிறகு அவளிடம் இசைவு தரச் சொல்லி கேட்க எனக்கு மனம் வராது. எனவேதான் உன்னுடைய உதவியைப் பெரிதும் விரும்பி நிற்கிறேன்.''

தோழி: "நீங்கள் மிகவும் இரந்து கேட்பதால்' உங்களுடைய கருத்தை அவளிடம் போய்த் தெரிவிக்கிறேன். 'நீங்கள் செல்லலாம்' என்று அவள் இசைவு தரவும் செய்வாள். ஆனால், அதற்குப் பிறகு அவளுக்கு ஏற்படும் துன்பத்தை யார் துடைப்பார்கள்?''

தலைவன்: "அவளுக்கு என்ன துன்பம் ஏற்படும் என்கிறாய்?''

தோழி: "உங்களை விட்டுப் பிரிந்த அவள் தன்னந்தனியாக இருப்பாள். உங்கள் வீட்டில் உள் இறப்பில் இருக்கும் அழகிய சிவந்த கால்களையுடைய ஆண்புறு, தான் விரும்பும் பெண்புறுவைப் புணர்ச்சிக்குக் கூவி அழைக்கும். காமவேட்கையோடு கிளம்பும் அக்குரலோசையை ஓயாமல் கேட்டுக்கொண்டிருக்கும் தலைவியும் காமவேட்கையுற்று மிகவும் வருந்துவாள். அப்படிப்பட்டவளைவிட்டுப் பிரிந்துபோக உங்களுக்கு மனம் உண்டா?''

தலைவன்: "மனதார நான் பிரிய விரும்பவில்லையே! வேறு வழியில்லை என்ற பொருள் நெருக்கடி காரணமாக அல்லவா நான் பிரிந்துசெல்ல விரும்புகிறேன்."

தோழி: "அப்படியானால், நீங்கள் புறப்படுவதற்குமுன்பு தலைவியைப் பார்த்து, அவளுடைய நெற்றியையும் கண்ணையும் தடவிக்கொடுத்து, அவளுக்கு ஆறுதல் சொல்லிவிட்டுச் செல்லுங்கள். அதற்கான வன்மை உங்களிடம் உண்டு என்றால், நான்போய் அவளிடம் உங்களுடைய கருத்தைத் தெரிவிக்கிறேன்.''

தலைவன்: "சரி! அப்படியே நான் செய்கிறேன்.'' (என்று சொல்லிவிட்டுப் புறப்படுகிறான்.)

தோழியின் சொற்படி, தலைவியைக்கண்டு சொல்லிவிட்டுப் புறப்படும் எண்ணத்துடன், தலைவன் அவ்விடம்விட்டு அகல்கிறான். தலைவன் தலைவியைக் காணுவதற்குமுன், தோழி தலைவியைக்கண்டு நிலைமையை விளக்குகிறாள். தலைவி மிக்க வருத்தத்தில் ஆழ்கிறாள்,

சிறிது நேரத்திற்கெல்லாம் தலைவன் தலைவியிடம் வந்து சேர்கிறான். தலைவி கண்ணீரும் கம்பலையுமாகக் காட்சியளிக்கிறாள். அவளைக் கட்டியணைத்து, நெற்றியையும் கண்ணையும் தடவிக்கொடுத்து, ஆறுதல்மொழி கூறி, அவளிடம் விடைபெற்றுச்செல்ல விரும்புகிறான். அவள் மேலும் கண்ணீர் உகுத்து அழுகிறாள். இந்த நிலையில் தலைவியை விட்டு விட்டுச்செல்ல அவனுக்கு மனம்வரவில்லை. எனவே, பிறிதொருபொழுது வெளியூருக்குப் புறப்பட்டுக்கொள்ளலாம் என்று கருதிக்கொண்டு, பயணத்தை நிறுத்திக்கொள்கிறான். அந்தக் கருத்தை தலைவியிடம் வெளியிடுகிறான். தலைவியும் அகமகிழ்ந்து முகமலர்ச்சி கொள்கிறாள்!

நற்றிணை 71-ஆம் செய்யுளின் உட்கருத்தே இங்கு தீட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. இது தலைவனைத் தோழி வெளியூர்ப்புறப்படாதவாறு செய்தது என்னும் பிரிவின்பாற்பட்ட பாலைத்திணையைச் சார்ந்ததாகும். இந்தச்செய்யுளை இயற்றியவர் **வண்ணப்புறக் கந்தரத்தனார்** என்ற புலவராவார். இவரது இயற்பெயர் கந்தரத்தனார் என்பது. கந்தரத்

தனர் என்ற பெயருடையோர் வேறு சிலர் இருந்த காரணத்தால், அவர்களினின்றும் இவரைப் பிரித்துக்காட்டவேண்டி, இவரது பாடலில் "வண்ணப்புறவின் செங்காற் சேவல்" என்ற அடியில் புறவினை வண்ணப் புறவு என்று கூறிய சொற்சிறப்புநோக்கி, அச் சொல்லையே இவருக்கு அடைமொழியாக்கி, வண்ணப்புறக் கந்தரத்தனர் என்று பிறர் அழைக்கலாயினர். இவருடைய பாடல்கள் அகநானூற்றில் ஒன்றும், நற்றிணையில் ஒன்றுமாக இரண்டு கிடைக்கப்பெற்றுள்ளன.

மன்னாப் பொருட்பிணி முன்னி இன்னதை
வளையணி முன்கைநின் இருளைக்கு உணர்த்தெனப்
பன்மாண் இரத்திர் ஆயின் சென்மென
விடுநள் ஆதலும் உரியள் விடினே
கண்ணும் நுதலும் நீவி முன்நின்று
பிரிதல் வல்லிரோ ஐய செல்வர்
வகையமர் நல்லில் அகஇறை உறையும்
வண்ணப் புறவின் செங்கால் சேவல்
வீழ்துணைப் பயிரும் கையறு முரல்குரல்
நும்மிலள் புலம்பக் கேட்டொறும்
பொம்மல் ஓதி பெருவிதுப் புறவே.

[நற்றிணை—71]

[பொழிப்புரை ; ஐய! நிலையில்லாத பொருளைத் தேட ஆசை பிணித்தலால், அதனிடத்துக் கருத்தைச் செலுத்தி, இச்செயலை வளையணிந்த முன்கையையுடைய நின்தோழிக்குக் கூறுவாயாக என்று பலவாக் மாட்சிமைப்பட இரந்து கூறுகின்றீராதலால், நான் சென்று கூறினால், 'நீர் செல்லுவீராக' என்று உம்மை விடுத்தலுஞ் செய்வாள்; அப்படி அவள் உம்மை விடுப்பினும் செல்வருடைய பல கட்டுக்களமைந்த வீட்டின் கண்ணே உள்ளிறப்பிலிருக்கும் அழகிய சிவந்த கால்களையுடைய சேவற் புரு தான் விரும்பிய பெண் புருவைப் புணர்ச்சிக்கு அழையா நிற்கும் காமத்தால் செயலறவுகொண்டொலிக்கின்ற அக்குரலோசையை, நும்மைப் பிரிந்து தனிமையா யிருந்து கேட்குந்தோறும் எம் பொலிவு பெற்ற கூந்தலையுடைய தலைவி பேரவாவால் நடுங்கி வருந்துமாறு அவளுக்கு முன்பு நின்று, நீர் அவளுடைய கண்ணையும், நெற்றியையும் தடவிக்கொடுத்துப் பிரிந்து போவதற்கு வல்லமையுடையீரோ ? உடையீராயின் சென்று சொல்லுவேன்.

மன்னா - நிலையில்லாத ; முன்னி - நினைத்து ; இருளை - தோழி ; மாண் - மாட்சிமைப்பட்ட; இறை - உள்இறப்பு ; புறவு - புரு ; வீழ்துணை - தான்விரும்பிய பெண்புரு ; பயிர்தல் — புணர்ச்சிக் கழைத்தல் ; பொம்மல் - பொலிவு பெற்ற ; ஓதி - கூந்தல் : விதுப்பு - ஆசையால் வருத்துகின்ற வருத்தம்.]

தலைவனைப்பிரிந்து வாழும் தலைவியது வருத்தம் எத்தன்மையது என்பதை மேற் கண்ட செய்யுளில் புலவர் நயம்பட எடுத்துக் கூறியுள்ளார். தன்னந்தனியாகத் தலைவி வாழும்போது, வீட்டின் உள் இறப்பிலிருக்கும் ஆண்புரு பெண்புருவைப் புணர்ச்சிக்கு அழைக்க, அக்குரலோசையை அடிக்கடி கேட்டுக்கொண்டிருக்கும் தலைவி மிக்க காதல் வேட்கையுற்றுத் துன்புறுவாள் என்று தோழி தலைவனுக்குச் சுட்டிக்காட்டி, அவனை வெளியூர் செல்லாதபடி தடுத்து நிறுத்தும் பாங்கு நயம் நிறைந்ததாகும்.

மாளிகையின் உள்இறப்பில் புருக்கள் தங்குதல், ஆண்புரு குரல்எழுப்பிப் பெண் புருவைப் புணர்ச்சிக்கு அழைத்தல், காதலன் காதலியின் நெற்றியையும், கண்ணையும் தடவிக்கொடுத்தல்போன்ற பழக்கங்கள் இச் செய்யுளில் குறிப்பிடப்படுகின்றன.

புருக்கள் அடிக்கடிப் புல்லிப் புணரும் தன்மையன என்றும், அவற்றை நோக்கு வார்க்குக் காமவின்பம் மிகவாகும் ஆதலின் அதன்பொருட்டு புரு வளர்ப்பது மக்களுக்கு இயல்பு என்றும் கூறுவர்.

சிறுகதை

முதல் நோயாளி

★

(ராதா)

"டாக்டர் சந்திரன் M.B., B.S." என்று புதிதாகத் தொங்கவிடப்பட்டிருந்த அந்த போர்டைப்பார்த்து, வீதியிலே செல்பவர்களில் சிலர் வேலைக்காரச் சிறுவனிடம் விசாரித்துவிட்டுச் சென்றனர். வேலைக்காரச் சிறுவன் பெருமிதத்துடன் டாக்டர் சந்திரனின் வரலாற்றையே கூறும் வகையில் முதலில் பதில்தர ஆரம்பித்துக் கடைசியில், "இன்றுதான் வந்தார்", "சென்னையிலிருந்து வருகிறார்", "புதிய டாக்டர்" என்று ஓரிரு வரிகளிலே பதிலை முடித்துக்கொள்ளும் கட்டத்திற்கு வந்துவிட்டான். ஆள் தடபுடலாக இருந்தால் பணிவோடு பதில்தருவான். இல்லையென்றால் சலிப்புடன் பேசுவான்.

மணி பன்னிரண்டு இருக்கும். வேலைக்காரச் சிறுவன் சற்று ஓய்ந்திருந்த வேளை. அந்த நேரத்தில் கூன்விழுந்த கிழவியொருத்தி தள்ளாடிக்கொண்டு அங்குவந்தாள்.

"ஏன் தம்பி! டாக்டரய்யா வந்திருக்காராமே?"

"ஆமாம்".

"பட்டணத்திலேயிருந்து வந்திருக்காராமே!"

"ஆமாம்."

"தம்பி! அவரை நான் பார்க்கணுமே."

"இப்ப ஒன்னும் பார்க்கமுடியாது. சாயங்காலந்தான் பார்க்கமுடியும். போயிட்டு சாயங்காலமா வா!"

கிழவி தயக்கத்துடன் கொஞ்சநேரம் நின்றாள்.

"என்ன, நான் சொல்றது காது கேட்கலே? நின்னுகிட்டேயிருக்கியே!"

இடுப்பிலே கையைவைத்தபடி கிழவி திரும்பினாள். அதற்குள் டாக்டர் சந்திரன் வெளியே வந்தார்.

"என்னடாது?"

"நீங்க வந்து அரைநாள்கூட ஆகலை அதற்குள் மருந்து வாங்க வந்துட்டாங்க சாயங்காலம் வான்னு சொன்னேன்."

"சரி கூப்பிடு, இது பட்டணமில்லே இந்த நேரத்திலே தான் பார்க்கணுமுன்னு அவர்களுக்கு தெரிய"

அறைக்குள் நுழைந்தார் சந்திரன். நேரமிருக்கும்போது நோயாளியை ஏன் அலைய வைக்க வேண்டுமென எண்ணினார். மேலும் புதிய ஊருக்கு வந்து முதலாவதாக ஒரு நோயாளியைப் பார்க்கப்போகிறோம் என்ற உற்சாகமும் கொண்டார்.

சிறுவன் கிழவியை அழைத்து வந்தான். டாக்டர் பெஞ்சியைக் காட்டி உட்காரச் சொன்னார்.

"என்னம்மா, உனக்கு உடம்புக்கு?"

"என்னைச் சாவுதான் இன்னும் அழைக்கலை!"

"என்ன செய்யுது, காய்ச்சலா, உடம்பு வலியா?"

"எனக்கு உடம்புக்கு ஒன்னுமில்லே ஐயா."

"பிறகு உன் வீட்டிலே யாருக்காவது..."

"நான் ஒண்டிக்கட்டைதான், இன்னைக்கோ நாளைக்கோன்னு இருக்கேன்"

ஸ்டெதாஸ்கோப்பைக் கழற்றி மேசையில் வைத்தபடி டாக்டர், "எதற்காக என்னைப் பார்க்க வந்தாய், வேலைகீலை ஏதாவதுகிடைக்குமா என்று கேட்கவந்தாயா?" என்று கேட்டார்.

வீட்டு வேலைகளைச் செய்ய ஒரு வேலைக்காரி வேண்டுமென வீட்டுச் சொந்தக்காரரிடம் கூறியிருந்ததையொட்டி கிழவி வந்திருப்பாள் என்று டாக்டர் எண்ணினர்.

"இல்லையயா, சென்னப்பட்டனத்தில் என் மகன் ரத்தினம் இருக்கான். அவனை நீங்க எப்பவாவது பார்த்திங்களான்னு கேட்கவந்தேன்"

"சென்னையிலே பல லட்சம்பேர் இருக்கிருங்க. அதிலே உன்மகனும் ஒருத்தனுக இருக்கலாம். எனக்கெப்படித்தெரியும்."

"இல்லே, தெரியுமான்னு கேட்டேன். அங்கேயிருந்து எத்தனையோபேர் வராங்க, போராங்க ஒருத்தருக்கும் என் மகனைப்பத்தித் தெரியலே. இரண்டு மாமாங்கம் - இருபத்தஞ்சு வருஷத்துக்கு மேலாகுது அவன்போயி ஒருசேதியும் தெரியலே!" கிழவி பெருமூச் செறிந்து கூறினள்.

கிழவியின் நிலையைக்காண பரிதாபமாக இருந்தது. என்ன ஆறுதல் கூறுவதென்று சந்திரனுக்குப் புரியவில்லை. மகன் வராமலிருப்பதற்குக் காரணமென்ன வென்பதை அறிய விரும்பினர்.

"ஏன் உன் மகன் இத்தனை காலமாக உன்னை வந்து பார்க்காமலிருக்கிருன்?"

கிழவி பதில் பேசவில்லை. அவளது ஒட்டிய கன்னங்களில் கண்ணீர் வழிந்தது. வெளியிடமுடியாத ஏதோ ஒன்று அவளுடைய உள்ளத்தில் உறைந்து கிடக்கின்றது என்று டாக்டர் சந்திரன் எண்ணினர்.

"உனக்கு இங்கு சொந்தக்காரர்கள் யாருமில்லையா?"

"எங்க வீட்டிலே பணத்தை நாங்க படிப்படியாக அளந்து வாழ்ந்த காலத்தில் ரொம்ப பேர் இருந்தாங்க?"

கிழவி செல்வக்குடியில் பிறந்து வளர்ந்தவளாக இருக்கவேண்டும் என்று டாக்டர் எண்ணினர்.

"உனக்கு வீடு, வாசல், சொத்து ஏதும் இல்லையா?"

"வீடாவது வாசலாவது! கூழோ கஞ்சியோ கிடைக்கிறதை குடித்து இந்த உடம்பை வளர்த்துகிட்டு இருக்கேன். என் மகன் வந்து என்னைக் காப்பாத்துவான்னு ரொம்பநாள் நினைச்சிருந்தேன். இப்ப இந்த உயிர் போறதுக்குள்ள ஒரு தடவையாவது அவனை பார்த்தா போதும்னு இருக்கு."

"உன் மகன் சென்னையில் என்னவேலை பார்க்கிருன்?"

"எங்கே இருக்கான் என்ன வேலை செய்ருன், ஒன்றும் தெரியலே. ஆனு இங்கே இருந்து போயிவரவங்க அங்கே பாத்தேன் இங்கே பாத்தேன, அப்படின்னு சொல்ருங்க. என்னை எல்லாரும் ஏமாத்துருங்க. நான் கொடுக்கிற கடுதாசிகளை யாரும் என் மகங்கிட்டே கொடுக்கிறதில்லே. கொடுத்திருந்தா என் கஷ்டத்தைக் கேட்டு சும்மாயிருக்கமாட்டான். இந்தா பாருங்க இந்தக் கடுதாசி. இன்னிக்குத்தான் எழுதிவாங்கியாந்தேன். மேட்டுத்தெரு நாயக்கரு பட்டணம் போருரும். அவருகிட்ட கொடுக்கலாமுன்னு இருக்கேன். கடுதாசி சரியாயிருக்கான்னு பாருங்க. என்மகன் இங்க வரமாதிரி வேற ஏதாவது எழுதலாம்னு கொஞ்சம் எழுதித்தாங்க!"

ஒரு சிறு மூட்டையிலிருந்து அழுக்கேறியிருந்த ஒரு காகிதத்தை டாக்டரிடம் நீட்டினள். அதைவாங்கி திருப்பித் திருப்பிப் பார்த்தார். காகிதத்தில் எண்ணெப்பசை ஏறியிருந்ததேயொழிய எழுத்துகள் ஏதும் இல்லை.

"வெறுங் காகிதமாகத்தானே இருக்கு"

"என்ன ஒன்னும் எழுதியில்லியா?"

"ஒரு எழுத்துக்கூட இல்லியே."

"பாத்திங்களா அந்தப் பொண்ணுகூட என்னை ஏமாத்திட்டுதே!"

"எந்தப்பொண்ணு?"

"எதித்த வீட்டிலேதான் இருக்கா அந்த சுட்டி. அப்பவே நான் நினைச்சேன். நான் சொல்லிமுடிக்கிறதுக்குள்ளே எழுதியாச்சு எழுதியாச்சுன்னு. எனக்கு கண்ணும் தெரியலே எழுதவும்முடியாது. எனக்கு உதவ யாரு

மில்லே இந்தஊரிலே. எல்லாம் நான்செய்த பாவம்!'' என்று வேதனைப்பட்டுக்கொண்டாள் கிழவி.

டாக்டருக்கு எதிர்வீட்டுப்பெண் மீது கடுங் கோபம் ஏற்பட்டது. அவளைப் பார்த்து திட்டவேண்டுமென்று எண்ணினர். ஆனல் ஒரு சந்தேகமும் எழுந்தது. "ஆமாம், அந்தப் பெண் தந்தது இந்தக்காகிதம்தானு அல்லது அதை எங்காவது போட்டுவிட்டாயா?''

"அவகொடுத்ததை அப்படியே இந்த மூட்டையில் கட்டிவைச்சேன். வேறகடுதாசியும் எங்கிட்டே கிடையாது.''

பொதுவாக இம்மாதிரி உதவிகளைச்செய்து தர இளம்வயதினருக்கு பொறுமையிருப்பதில்லை, தட்டிக்கழித்துவிடுவார்கள். அதே போல் எதிர்வீட்டுப் பெண்ணும் கிழவியை ஏமாற்றியிருக்கலாம் என்று எண்ணினர். கிழவிக்குத் தேவையான கடிதத்தைத் தாமே எழுதிக்கொடுத்துவிடலாமென முடிவுசெய்தார்.

"சரி, அந்தப் பெண்ணை நான் அப்புறம் பார்த்துக் கேட்கிறேன். இப்ப, என்ன எழுதனும், சொல்லு நான் எழுதித்தருகிறேன்.''.

"நீங்க நல்லாயிருப்பிங்க?''

டாக்டர் மேசையிலிருந்த காகிதத்தை எடுத்துவைத்து எழுத முற்பட்டார்.

"என்ன எழுதணும்?"

"பேப்பர் எடுத்துகிட்டிங்களா'' எழுதுங்க...

"தம்பி ரத்தனத்துக்கு' மூதல்ல போட்டுகுங்க. '... இப்பவும் ... உனக்கு நான்... பலதடவையும்... சொல்லியனுப்பியும்... நீவரவில்லை. நீவரவில்லை. வந்து... நீ... இந்தக் கடுதாசியைப் பார்த்ததும்... உடனே இங்கேவரணும். நான் உன்னைப் பார்க்கணும். நீ...வரும் போது...எனக்கு... குறைஞ்சவிலையில்......ஒரு புடவை வாங்கி... பத்திரமாக எடுத்துவா. என் புடவை...ரொம்ப...கிழிந்து இருக்கிறது. நீ இப்ப...இங்கே வந்தால்...இங்கேயே... வேலை தேடிக்கலாம். என்னல் ... இப்போ... அதிகமா...வேலை செய்யமுடியலை...சாப்பாட்டுக்கும்...கஷ்டமாயிருக்கு ... ஆனதினல் ... நீ உடனே...புறப்பட்டுவரவும். வரவும்... 'மறந்துவிட்டேனே? இதையும் சேத்துக்குங்க' ... நீ வரும்போது...எனக்கு ...... ஒரு போர்வையும் வாங்கிவா......இங்கே குளிரு அதிகமாயிருக்கு. நீ ... கட்டாயம் ... வந்துடணும்......வேணும்.' என்ன எழுதிட்டிங்களா?''

"எழுதியாச்சு''

"என் பேரையும் போட்டிடுங்க!''

"உன் பேரென்ன?''

"அதைச்சொல்லலியே! பார்வதின்னு எழுதுங்க.''

டாக்டர் கடிதத்தை மடித்து ஒரு கவருக்குள் போட்டுக் கிழவியிடம் கொடுத்தார். அதை வாங்கி தனது மூட்டையில் வைத்து முடிந்து கொண்டாள்.

"உங்களப்போல யாராவது இப்படி எழுதித் தந்திருந்தாங்கன்னு, என்மகன் இங்கே எப்பவோ வந்திருப்பான். நீங்க எழுதிக் கொடுத்து உதவியதை என்னைக்கும் மறக்க மாட்டேங்க. நான் வரேங்க''டாக்டரின் பதிலை எதிர்பார்க்கவில்லை. கிழவி எழுந்து வெளியேறினள்.

கிழவி சென்றதும்தான் அவளுக்கு ஏதாவது பணம் கொடுத்து உதவியிருக்கலாமென்று டாக்டருக்குத் தோன்றியது.

ஒட்டிச்சுருங்கிய முகம், இருக்கின்றனவோ எனும்படியாகக் கண்கள், கூன் விழுந்தநடை, தள்ளாத வயது. உடலிலே வலிவில்லை, உள்ளத்திலே வாட்டம். செல்வக்குடியில் பிறந்து சீர் சிறப்புடன் வளர்ந்தவள் ஏழ்மைக்குத் துரத்தப்பட்டு, உற்ரூர் உறவினர் உதவிகிட்டாமல், ஊர்மக்கள் ஏமாற்ற, பெற்றெடுத்த பிள்ளையும் வெறுத்தொதுக்க, அவள் நடைப்பிணமாக அலையும் நிலைமை ஏன் ஏற்பட்டது?

சிந்தனையிலாழ்ந்திருந்த டாக்டரைத் தட்டியெழுப்பியது வேலைக்காரச்சிறுவன் கொடுத்த குரல்.

"என்னடா?''

"எதிர்த்த வீட்டுக்காரராம். உங்களைப் பார்க்க வந்திருக்கார்.''

"உள்ளே அழைத்து வா''

அவரிடம் கிழவியை ஏமாற்றிய அந்தப் பெண்ணைப்பற்றிக் கேட்க வேண்டுமென எண்ணிக்கொண்டார்.

"வணக்கம்!'' என்று கூவியபடி உள்ளே நுழைந்தார் அந்த எதிர்த்த வீட்டுக்காரர்.

"வணக்கம், உட்காருங்க!''

அறையை ஒருதரம் சுற்றிப் பார்த்துவிட்டு அவர் பேச்சைத் துவக்கினர். "எதிர் வீடுதான் என்னுடையது! நீங்க இன்னிக்கு காலையில் வந்திங்கன்னு சொன்னங்க. இப்படிப் பார்த்துவிட்டுப் போகலாம்னு வந்தேன். நீங்க வந்தது இனி எங்களுக்கெல்லாம் ரொம்ப உதவியாயிருக்கும்.''

டாக்டர் ஒரு அசட்டுச் சிரிப்பை வரவழைத்துக்கொண்டார். பாக்கியநாதர், டாக்டர் ஏதா

வது பேசுவார், அதைத் தொடர்ந்து தாம் பேசலாம் என்றிருந்தார். டாக்டருக்கோ என்ன பேசுவதென்றே தெரியவில்லை. அந்தப் பெண்ணைப்பற்றிக் கேட்கவே அவர் மனம் தூண்டியது.

"உங்களுக்கு பெண் குழந்தைகள் உண்டா"

"ஒரே ஒரு பெண்மட்டும்தான். ஏன், ஏதாவது மாப்பிள்ளை வைத்திருக்கிறீர்களா?"

"இல்லையில்லை! சற்றுமுன் கிழவியொருத்தி இங்குவந்தாள். அவளுக்கு கடிதம் எழுதித் தருவதாகக் கூறி ஏமாற்றியதாகக் கூறினள்"

"அந்தக் கிழவி உங்களிடமும் வந்துவிட்டாளா?"

"ஏன், என்ன விஷயம்?"

"அவள் ஒரு அரைப் பைத்தியம்."

"பைத்தியமா? நன்ருகப் பேசுகிருளே!"

"ஆமாம். ஏதோ படிச்சவதான், பைத்தியங்களில் பலவகையில்லையா!"

"ஏன இப்படிப் பைத்தியமாகணும்!"

"சார், அவளுக்கு இரண்டு பிள்ளைகள். இளைய மகன் இந்த ஊரில்தான் இருக்கிருன். அவனிடம் இவள் செல்வதில்லை, அவனைக் கண்டாலே இவளுக்கு பிடிக்காது. மூத்த மகன் சின்ன வயசில் எங்கயோ ஓடிவிட்டான். யாரோ பட்டணத்தில் அவன் வேலை பார்ப்பதாகச் சொன்னுர்கள். அதிலேருந்து அவன் வருவான் வருவான் என்று நினைத்துக்கொண்டே இருக்கிருள். சென்னையிலிருந்து யார் வந்தாலும் சரி, அவர்களைக் கண்டு தன் மகனைப்பற்றி விசாரிக்காமல் விடுவதில்லை. இங்கிருந்து சென்னைக்கு யார் போவதாகச் சொன்னுலும் அவர்களிடம் கடிதம் தந்து தன் மகனைப்பார்த்துக் கொடுக்கும்படிச் சொல்வாள். இந்த ஊரிலுள்ளவர்களெல்லாம் அவளுக்குக் கடிதம் எழுதிக்கொடுத்து அலுத்துப்போய்விட்டார்கள்."

"சாப்பாட்டுக்கு என்னதான் செய்கிருள்."

கையால் இலைகள் தைத்து அதைவிற்று ஜீவனம் செய்கிருள்."

"இளையமகன் மிகவும் கொடுமைக்காரனே?"

"ரொம்ப நல்லவன்தான். எவ்வளவு சொல்லிப்பார்த்தும் இந்தக்கிழவி கேட்பதில்லை. இப்படி தெருவில் திரிவதைப் பார்த்து தன மானம் போகிறதென்றுகூட சலித்துக்கொள்கிருன்."

தாயை மறந்திருக்கிருன் மூத்தமகன்; அவன் வருகைக்காக காத்திருக்கிருள். இளைய மகன் உயிருள்ளவரைக் காப்பாற்றுவதாகக் கூறுகிருன்: அவனை வெறுக்கிருள். தாயன்பு இருபிள்ளைகளிடத்தும் வேறுபடுவதேன்? கிழவியின் விசித்திரப்போக்கிலே டாக்டரின் சிந்தனை சென்றது.

டாக்டர் சந்திரன் அந்த ஊருக்கு வந்து இரண்டு வாரங்களாகியது. அவரைத்தேடி வரும் நோயாளிகள் பெருகினர். அந்த இரண்டுவாரங்களில் ஊரின் நிலைமைகளையெல்லாம் — அந்த அறைக்குள்ளிருந்தபடியே நோயாளிகளின் வாயிலாக டாக்டர் தெரிந்துகொண்டார். ஆனல் கிழவியைப்பற்றிமட்டும் அதிகம் தெரிந்துகொள்ள முடியவில்லை.

அன்று மாலை 6 மணியிருக்கும். நோயாளிகள் யாரும் இல்லை. சந்திரன் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து படித்துக்கொண்டிருந்தார். ஒரு வண்டி வாசற்படியில் வந்து நின்றது. ஒரு நோயாளியை இரண்டுபேர்கள் இறக்கி தூக்கிவந்தனர்.

நோயாளி அந்தக் கிழவியாக இருப்பதைக் கண்டு ஆச்சரியமடைந்தார் டாக்டர்.

"என்ன நேர்ந்தது?"

"ஒருமரம் விழுந்து காலில் அடிபட்டுவிட்டது" சந்திரன் காலைத்தொட்டுப்பார்த்தார். கால் வீங்கியிருந்தது. கணுக்கால் எலும்புகள் நொறுங்கியிருப்பதுபோல் தோன்றியது. அடிப்பட்ட இடத்தை சுத்தம்செய்து காயங்களுக்கு மருந்துவைத்துக் கட்டினர்.

"டாக்டர்! கிழவி இங்கேயே இருக்கட்டும் நான்போய் அவளுடைய மகனிடம் சேதியைச் சொல்லி அவனை வரச் சொல்லுகிறேன்" என்று ஒருவன் கூறினன்.

அதுவரை பேசாமலிருந்த கிழவி கூச்சலிட ஆரம்பித்துவிட்டாள். "வேண்டாம்! அவனைக் கூப்பிடாதிங்க! அவனை நான் பார்க்கவே மாட்டேன் என்னை வேணுமான கொன்னுடுங்க. அவனை வரச் சொல்லாதிங்க!"

"சரியம்மா! நீபேசாமலிரு அவன் இங்கே வரமாட்டான்." என்று கிழவியிடம் கூறிவிட்டு, அந்த ஆளிடம் மெதுவாக "இவளை இங்கேயே வைத்துக் கவனிக்கிறேன். இவளுடைய மகளைப் பார்த்து காலையில் வரச் சொல்" என்ருர் டாக்டர்.

ஆனல் கிழவிக்கு அடிபட்டது அவனுக்கு எப்படியோ தெரிந்துவிட்டது, அவன் ஓடோடியும் வந்தான்.

"சார்!"

சந்திரன் வெளியே வந்தார்.

"யாரது?"

"கிழவிக்கு எப்படி சார் இருக்கு!"

"நீ யாரப்பா!"

"என்னுடைய அம்மாதான் சார் அவள் அடி பலமா டாக்டர்!"

"கொஞ்சம் காலில் அடிபட்டிருக்கு. நான் கவனித்துக் கொள்கிறேன். ஆனால் நீ இப்ப அவளைப் பார்க்கவேண்டாம். உன் பேரைக் கேட்டாலே அவள் பயப்படுகிறாள். உன்னிடம் வர ஏன் அவள் மறுக்கிறாள்."

"அவளுடைய மூத்த மகன்தான் அவளுக்கு ராஜாவாம். அவன் வந்து அவளைக் காப்பாத்துவானும். எவ்வளவோ தடவை நான் சொல்லியாச்சு என்னைப் பார்ப்பதே பாபம் என்கிறாள். நான் என்ன செய்யறது!"

"நீ இப்ப அவளைப் பார்த்தா மனஅதிர்ச்சி அதிகமானாலும் ஆகும், நீ காலையில் வா. அதற்குள் அவளிடம் பேசி உன்னிடம் வர ஒப்புக்கொள்ளச் செய்கிறேன்."

"சரிங்க. காலையில் வரேங்க" என்று கூறி விட்டு அவன் சென்றான்."

கிழவியை ஒரு தனியறையில் படுக்கச் செய்தார். ரொட்டியும் பாலும் கொடுத்து சாப்பிடச் சொன்னார். கிழவி எதுவும் வேண்டாமெனக் கூறினாள். பிறகு டாக்டரின் வற்புறுத்தலின் பேரில் பாலைமட்டும் சாப்பிட்டாள்.

இரவு மணி பத்து அடித்தது. டாக்டர் தெர்மாமீட்டரை வைத்து காய்ச்சலின் வேகத்தைக் கவனித்தார். 102 டிகிரியிருந்தது. காலையில் காய்ச்சல் இறங்கிவிடும் என்று எண்ணி, தெர்மாமீட்டரைக் கழுவிக்கொண்டு திரும்பினார்.

"ஐயா!"

கிழவி டாக்டரைக் கூப்பிட்டாள்.

": என்ன வேண்டும்"

"ஐயா! எனக்கு ஒரு உதவி செய்யனும்!"

"என்ன உதவி?"

"நான் செத்துவிட்டேன்னு, அதை என் மகனுக்கு சொல்லி யனுப்புங்க!"

"எந்த மகனுக்கு இங்கிருக்கானே அவனுக்குத்தானே."

"இல்லையில்லை. பட்டணத்திலிருக்கிற மகனுக்கு"

அவளுடைய மன ஆறுதலுக்காக டாக்டர் சரியென்று கூறினார்.

"ஏனம்மா உங்களுக்கு இளைய மகன்பேரில் பிரியமில்லை?

டாக்டரின் கேள்விக்குக் கிழவி பதில் பேசவில்லை. கொஞ்சநேரம் சென்றது. மேலும் வற்புறுத்த விரும்பாமல் எழுந்துசென்று மருந்து கலந்துகொண்டு வந்தார். கிழவியை உட்காரச்செய்து மருந்தைக்குடிக்க உதவி செய்தார். பிறகு அவள் நன்றாக தூங்க வேண்டும் என்று எண்ணியவராக அறையை விட்டு வெளியேறினார். ஆனால் கிழவி கூப்பிடும் குரல் கேட்டது, திரும்பிவந்தார்.

"என்னவேண்டும்"

"டாக்டரய்யா. நான் பைத்தியமா?"

"யார்சொன்னா?"

"எல்லோரும் சொல்றாங்க"

"அவர்கள்தான் பைத்தியங்கள்! நீங்க பேசாமல் தூங்கணும்"

"என்னை ஊரில் பைத்தியம்னு சொல்றாங்க பிள்ளை அன்பில்லாதவன்னு சொல்றாங்க.ஆனா என் கதையை கேட்டிங்கன்னா, நீங்க அப்படிச் சொல்லமாட்டிங்கன்னு நினைக்கிறேன்."

டாக்டர் நாற்காலியை இழுத்துப்போட்டுக் கொண்டு உட்கார்ந்தார். கிழவி பேச ஆரம்பித்தாள்.

"என்னை பைத்தியமுன்னு சொல்றாங்க. ஆனா யாருக்கும் என் மனசிலே இருக்கிற வேதனை தெரியாது. அதைச்சொல்வதற்கே அவமானமாக இருக்கிறது.

அது எனக்கு கலியாணமான வருஷம். என் புருஷனுக்கு கோட்டையூர் ஜமீனில் கணக்கப் பிள்ளை வேலை கிடைத்தது. கோட்டையூருக்கு சென்றோம் அங்குதான் என் மகன் ரத்தினம் பிறந்தான. என் புருஷன் வழி தவறி நடக்காதவரு. ஜமீன்தார் ஜம்புலிங்கத் தேவர் பெண்ணாசைக்காரரு. ஒரு சமயம் கலியாணமாகாத ஒரு பெண்ணை அவருடைய ஆளுங்க வலுக்கட்டாயமா தூக்கியாந்து அவருடைய பங்களாவில் அடைத்துவைத்தாங்க ஜமீன்தார் அந்தப்பெண்ணை கெடுக்க நினைச்சாரு. அந்தப்பொண்ணு கதறிக் கதறி அழுதாளாம். என் புருஷன் ஜமீன்தாரு கிட்டே எவ்வளவு சொல்லியும் அவரு கேட்கலியாம்.

அன்னைக்கு வீட்டைவிட்டுப் போகும்போது அந்தப்பெண்ணை எப்படியாவது தந்தரம் செய்து தப்பிக்கச் செய்யணும் என்று என்னிடம் என் புருஷன் சொல்லிட்டுப் போனாரு.

சாயங்காலம் 6 மணியிருக்கும். ஜமீன்தாரு ஆள் வந்தான். என் புருஷனுக்கு வண்டி குடைசாஞ்சு அடிபட்டிருக்குன்னு சொல்லி என்னை அழைத்துவரச் சொன்னதாக் கூறினன். நான் அவசர அவசரமாக ரத்தனத்தை தூக்கி அடுத்தவீட்டுக் கண்ணம்மாளிடம்

கொடுத்து பாத்துக்கச் சொல்லிட்டு போனேன். அந்த ஆள் என்னை பங்களாவுக்குள்ளே அழைத்துப்போய் ஒரு அறையில் உட்காரச்செய்தான். கொஞ்சநேரம் ஆனதும் கதவைத்திறந்துகொண்டு ஜமீன்தார் உள்ளே வந்து கதவைத்தாழ்பாள் போட்டார்.

எனக்கு பயமாயிருந்துச்சு. உருட்டு விழியுடன் என்னை நெருங்கி வந்தான். என்னையும் கெடுக்க எண்ணியிருக்கான் என்பது எனக்குப்புரிந்தது. என் புருஷன் அந்தப் பெண்ணை தப்பிக்க வச்சதுக்காக என்னைப் பலிவாங்க போறதாகக்கூறி என்னைப்பிடிக்க வந்தான். நான் விலகியோடி கதவைத்திறந்தேன். ஆனால் வெளியில் மூடப்பட்டிருந்தது. அதற்குள் அவன் என்னைப்பிடிச்சுட்டான். எவவளவோ கெஞ்சினேன். அவன் கையைக்கூட கடித்துவிட்டேன். அவன் விடுவதாயில்லை. அவனோடு சண்டைபோட எனக்கு பலமும் இல்லை. ஆயுதமும் இல்லை. கடைசியில் என்னைக்கெடுத்துவிட்டான்.

இதற்குப்பின் இரண்டுமாதம்வரை அந்த அறையிலேயே அடைப்பட்டுக்கிடந்தேன். வெளியிலேபோக முடியாதபடி காவல் இருந்தது. என் புருஷன், என் மகன் எப்படி யிருக்காங்கன்னு எனக்கு தெரியலை. என் மானம் போனபிறகு செத்துடலாமுன்னு நினைச்சேன். ஆனல் ரத்தினத்தைப்பற்றிதான் கவலையாயிருந்தது. எப்படியாவது தப்பி வெளியேறி புருஷனிடம் கூறி ஜமீன்தாரை பழிவாங்கனும்னு எண்ணினேன். அதுவரை அவனுடைய இஷ்டங்களுக்கு நான் ஆளாகவேண்டியிருந்தது.

இரண்டு மாதங்களுக்குப்பின் ஒருநாள் ஜமீன்தாரன் வெளியூர் போயிருந்தார். ஒரு ஆள் மனசுவைச்சு உதவினன். நான் தப்பித்து என் வீட்டுக்கு வந்தேன். என் புருஷனில்லை. அடுத்தவீட்டில் கண்ணம்மாளும் இல்லை. என் புருஷனை இரண்டு மாதங்களுக்கு முன்பு ஜமீன்தார் ஆட்கள் கொலைசெய்திட்டதாகச் சொன்னங்க. ரத்தினத்தைத்தேடி— கண்ணம்மாவைத்தேடி அலையவேண்டியதாயிற்று. கடைசியில் இந்த ஊரில் கண்ணம்மா இருப்பதாககேட்டுவந்தேன். ஆனல் ரத்தினம் இல்லை. ரத்தினத்தை வளர்ப்பாக சென்னையிலிருந்து வந்த ஒருவர் எடுத்துச் சென்றதாகக் கூறினள். அவருக்கு பல தடவை கடுதாசிபோட்டும் பதிலேயில்லை.

ஜமீன்தார் செய்த அநியாயத்தால் என் வயிற்றில் கருவுண்டாயிற்று. கருவை அழிக்க முயற்சித்தேன். கண்ணம்மா தடுத்துவிட்டாள், பிள்ளை பிறந்தது. அப்படியே அந்த ஜமீந்தாரன் சாயல் இருந்தது. நான் குழந்தையைத்தொடமுடியாதென கூறிவிட்டேன். அதிலிருந்து கண்ணம்மாதான் அவனை வளர்த்துவந்தாள். நீங்க சொன்ன இளையபிள்ளை அவன்தான். அவனைக்கண்டால் எனக்கு ஜமீன்தாரனைபோலவே தெரியுது. அதனல்தான் எனக்கு அவனைப்பிடிக்கவில்லை. என்மகன் ரத்தினத்தை சிலர் பட்டணத்தில் பார்த்ததாகச்சொன்னங்க. ஆனல் எங்கேயிருக்கான்னு தெரியாது.”

கிழவி மேற்கொண்டு எதுவும் பேசவில்லை. டாக்டரும் வெகுநேரம் பேசாமல் சிந்தனையிலேயே ஆழ்ந்திருந்தார். இரவு ஒருமணியிருக்கும், கிழவி தூங்குவதைப் பார்த்து சந்திரன் எழுந்து தனது அறைக்குச்சென்றார்.

காலையில் எழுந்ததும், கிழவிக்கு வேண்டிய மருந்துவகைகளைத் தயாரித்து வைத்துவிட்டு வேலைக்காரனிடம் பல்பொடி கொண்டுவரச் சொல்லிவிட்டு கிழவியிடம் சென்றார்.

உயிரற்ற சடலமாகக் கிழவி கட்டிலில் படுத்திருந்தாள்!

சென்னையில் இருந்து
மே 15-ம் தேதி முதல்

A. V. P. ஆசைத்தம்பியின்

“தனி அரசு”

“கிரௌன்” அளவில் இரு கலர் ஆறு பக்கங்களில் மாதமிரு முறையாக வெளிவருகிறது.

விலை அணா 2
வருட சந்தா ரூ. 3

எல்லா இடங்கட்கும் முன்பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை!

“தனி அரசு”
131, பிராட்வே, சென்னை-1

"கிருதி! கிருதி!,' மாலிகைக் கூப்பிட்டாள்.

மாட்டுக்கொட்டிலின் மூலையில் முடங்கிக் கிடந்த கிருதி எழுந்துவந்தாள். மாடுகள் அசைபோட்டுக்கொண்டிருந்தன.

" அவர்கள் வந்துவிட்டார்கள்."

கிருதி பேசாமல் வெளியில் வந்தாள். யார் கூப்பிடுகிறார்கள் என்று அவள் கேட்கவில்லை. அவளுக்குத் தெரியும், யார் வந்திருப்பார்கள் என்று. வெளுத்த அவள் முகம், அசைவற்றிருந்தது.

அவளை அழைத்த மாலிகைக்கும் தெரியும், வெளியில் வந்திருப்பவர்கள் யாரென்பது. அவளும் ஏதும் சொல்லவில்லை.

கிருதி மாட்டுக்கொட்டிலைவிட்டு வெளியில் வந்தாள். அவள் கைகள் பின்புறமாகக் கட்டப்பட்டிருந்தன. அவளைப் பார்த்ததும், வெளியில் கூடியிருந்த சேரிப்பெண்களும், ஆண்களும் தங்கள் பேச்சை திடீரென்று நிறுத்திக்கொண்டார்கள். கூட்டத்தினர் ஒருகணம் கிருதியைப்பார்த்தார்கள். மறுகணம் எதிர்புறமாகத் திரும்பி பார்த்தார்கள். அங்கு நான்கு வீரர்கள் நின்றுகொண்டிருந்தார்கள்.

அந்த சேரியினருக்கு, வீரர்கள் யாரென்பது தெரியும். கௌசாம்பி நகரத்தில் மிகப்பெரிய பிரபுவாக விளங்கும் கபாலசேனனின் வீரர்கள் அவர்கள். இந்தகிராமமும், இதற்குப்பக்கத்திலுள்ள ஐம்பது கிராமங்களும் அந்த கபாலசேனனுக்கு அடிமையானதாகும்.

சேரியின் எல்லைக்கப்பால், வீரர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். மாலிகைத் தன் தோழி கிருதியை அழைத்துச் சென்றாள். தூக்கத்தில் நடப்பவள்போல, கிருதி நடந்தாள். பக்கத்திலிருப்பவர்கள் பார்ப்பதும் பேசுவதும் அவளுக்குத் தெரியவில்லை. கூட்டத்தினர் சொல்லிக்கொள்வது மாலிகையின் காதில் விழுந்தது.

" யாகம் நின்றுவிட்டதாம்!"

" பிரபு மிகுந்த கோபத்துடனிருக்கிறார்"

" கிருதிக்கு என்ன தண்டனை கொடுப்பார்கள்?"

கிருதிக்குத் தண்டனை ஏன்? அவள்மேல் என்ன குற்றம்? என்பதைப்பற்றி யாரும் விவாதிக்கவில்லை. அவள் முதல்நாள் செய்த குற்றம் பற்றி, அந்த சிற்றூரும், கௌசாம்பி நகரும் பேசிப்பேசி தீர்த்துவிட்டன. அவளுடைய குற்றம் தந்த அதிர்ச்சி இன்னும் நீங்கவில்லை.

இதுதான் அவள் செய்த பெருங்குற்றம்.

சேரியில் நல்ல தண்ணீர் கிடையாது. காட்டில் இருக்கும் ஒரு கிணற்றில்போய் சேரியிலுள்ளவர்கள் தண்ணீர் எடுத்து வரவேண்டும். முதல்நாள் கிருதி தண்ணீர் கொண்டு வரப்போனாள். காலை, மாலையில் சேரிப் பெண்கள் கூட்டமாகப் போய்வருவார்கள். கிருதிக்கு வேலை அதிகமிருந்ததால், நடுப்பகலுக்குமேல் மண்குடத்துடன் சென்றாள். தண்ணீரெடுத்ததும், நேராகத் திரும்பிவந்திருக்கலாம். வெய்யில் அதிகமாக இருந்ததால், பக்கத்திலிருந்த ராஜபாட்டையில் ஏறி, அங்கிருந்த ஆலமரத்தடியில் உட்கார்ந்தாள். குடத்தை சாய்த்து, தண்ணீரைக் குடித்தாள். ஆகா! கிருதி கண்ணை மூடினாள். மரத்தில் சாய்ந்தபடி உறங்கிவிட்டாள்.

சத்தம் கேட்டு, அவள் கண்விழித்தாள். எதிரில் பல்லக்கு நாலைந்துபேர்கள், குதிரையில் ஒருவன், மங்கித்தெரிந்தன. கிருதி தூக்கக்கலக்கத்தில் இருந்தாள்.

ஐயோ! நீசப்பெண்! என்பார்வையில் இருக்கிறாள்!" பல்லக்கைவிட்டு வெளிவந்த முனிவர்—ராஜகுரு அகோரமூர்த்தி கூச்சலிட்டார். பல்லக்குத்தூக்கிகள் சத்தம்போட்டார்கள். குதிரைவீரன் தன் சவுக்கை வீசினான். "ஐயோ!" வென்று கிருதி துள்ளி எழுந்தாள். கண்ணைப்பொத்திக்கொண்டு பிராமண முனிவர் நிற்பது தெரிந்தது. சுற்றிலும் பார்த்தாள், மாலைவெய்யில்! ராஜ

பாட்டையில்—அவள் திடுக்கிட்டாள். சூத்திர வகுப்பினர்—அதுவும் சேரியிலிருக்கும் சண்டாள சாதியினர் ராஜபாட்டையில் அடியெடுத்து வைக்கக்கூடாது. அந்த வழியில் உயர் சாதியினரான பிராமணுேத்தமர்களும், க்ஷத்திரிய வீரர்களும் அடிக்கடி போவார்களாதலால்! அந்தத்தடை கிருதிக்கும் தெரியும். இருந்தாலும் நடுப்பகல் வெய்யிலில் யாரும் வரமாட்டார்கள் என்று அவள் அரச மரத்தடியில் உட்கார்ந்தாள். ஆனல் நீண்ட நேரம் தூங்கிவிட்டாள். அந்தநேரத்தில், சௌகாம்பி நகரில் பெரிய யாகத்தை நடத்தப் போய்க்கொண்டிருந்த அகோரமூர்த்தியின் பல்லக்கு அந்த மரத்தடியில் இறங்கியது.

“ சீ! நீசப்பெண்ணே! ராஜபாட்டையில் எப்படி நீ வந்தாய்?” குதிரைவீரன் உறுமினுன். கண்ணைப்பொத்திக்கொண்டு அகோர மூர்த்தி நின்ருர்.

அவசரத்தில் குடம் நழுவி விழுந்தது, உடைந்தது, அதிலிருந்த தண்ணீர் வழிந்து ஓடியது, கண்ணை மூடிகொண்டு நின்ற முனிவர் அகோரமூர்த்தியின் காலடியில் தண்ணீர் பட்டது. நெருப்பை மிதித்தவர்போல ராஜகுரு துள்ளிக்குதித்தார். அவர் பார்வையில் கோபம் கொழுந்துவிட்டெறிந்தது. அவள் தொட்ட தண்ணீர் என் காலில் பட்டுவிட்டது! அசுத்தப்பட்டுவிட்டேன், என் உடல் தீட்டுப்பட்டது! அபுண்ணியனுனேன், சண்டாளனுனேன், பாபாத்மாகிவிட்டேன்! ஹே! ஈச்சுவரா!” உடல் பதைபதைக்க அகோரமூர்த்தி பல்லக்கில் உட்கார்ந்து கொண்டார்.

குதிரைவீரன் கீழே குதித்து சவுக்கை சுழற்றினுன், கிருதி துவண்டு விழுந்தாள். “ஐயோ! ஐயோ!” என்று புரண்டாள், சவுக்கடி பலமாக இருந்தது.

“பல்லக்கை எடு!” குரு ஆணையிட்டார். பல்லக்கு உயர்ந்தது.

குதிரைவீரன் பக்கத்தில் வந்து, வினயத்துடன் கேட்டான். குருதேவ! சௌசாம்பி அருகாமையில்வந்து விட்டது! அங்கு யாகத்திற்கான சகல ஏற்பாடுகளுடன் பிரபு கபால சேனன் உங்களுக்காகக் காத்துக்கொண்டிருக்கிருர்,! உங்கள் வருகைக்கு பூரணகும்பம் தயாராக இருக்கிறது! நான் முன்னுல்போய் நீங்கள் வருவதைச்சொல்கிறேன்!”

அகோரமூர்த்தி உருட்டி விழித்தார். “கபாலசேனனிடம் சொல், அவனுடைய யாகம் நடக்காது என்று! நான் அசுத்தப்பட்டு விட்டேன்! சண்டாளப்பெண் தொட்ட தண்ணீர் என் காலில் பட்டுவிட்டது! முதலில் நான் சுத்தமானல்தான், யாகத்தை நான் நடத்தமுடியும்! நான் புண்ணியனுக, பத்து நாள் பூசைசெய்து, சண்டாளத்துவமடைந்த என் காலில் ஆயிரங்குடம்கங்கை தண்ணீரைக்கொண்டு அபிஷேகஞ் செய்யவேண்டும்! பிறகுதான் கபாலசேனனுக்காக நான் யாகம் செய்ய முடியும்!”

பல்லக்கு நகர்ந்தது.

குதிரை வீரன் பக்கத்தில் வந்த காவல் வீரன் ஒருவன் நிறுத்தி, “டேய்! இவளைக் கொண்டுபோய் அடைத்து வைக்கச்சொல்! நான்போய் பிரபுவிடம் சொல்லி, தண்டனை தர ஆட்களை அனுப்புகிறேன்!” என்று கட்டளையிட்டு, குதிரையைத் தட்டிவிட்டான்.

பல்லக்கு மறைந்தது, குதிரை அதற்குமுன் பறந்து சென்றுவிட்டது. கிருதியின் கைகள் பின்புறமாகக் கட்டப்பட்டு, கொட்டிலில் அடைக்கப்பட்டாள்.

கிருதியின் குற்றம் கௌசாம்பி நகரை அல்லோகலப்படுத்தியது. கபாலசேனன் கலக்கமடைந்தான். யாகசாலை பொலிவிழந்தது. யாகம் நிறுத்தப்பட்டது. கங்கையிலிருந்து ஆயிரங்குடம் தண்ணீர் கொண்டுவர, காவல்காரர்கள் அனுப்பப்பட்டனர். அசுத்தப்பட்ட குருதேவ்—ராஜகுரு—என்றெல்லாம் போற்றப்படும் அகோரமூர்த்தி யாரையும் பார்க்காமல், யாரையும் தொடாமல் உபவாசமும், ஜபமும் மேற்கொண்டார்.

சேரியில்—கௌசாம்பி நகரிலிருந்து காத தூரத்துக்கப்பால் இருந்த சிற்றூரில், இருந்தவர்கள் கிருதியைப் பார்த்து பரிதாபப்பட்டார்கள். இரவு முழுவதும் கிருதிக்கு என்ன தண்டனை தரப்படலாம் என்பதுபற்றி தங்களுக்குள பேசிக்கொண்டார்கள். அகோரமூர்த்தி பல அரசர்களுக்கு ராஜகுருவாக இருப்பவர். அவரை அசுத்தப்படுத்திய குற்றம் மிகப் பெரிது! தண்டனையும் கடுமையாக இருக்கலாம்! கைகால் வெட்டப்படலாம், கழுத்து துண்டிக்கப்படலாம், கனலில் தள்ளப்படலாம்!

மற்ற வேலைகளுக்கிடையில், குதிரை வீரன் கிருதியை மறந்துவிடவில்லை. கடுமையாகத் தண்டனை கொடுக்க வேண்டுமென்று அவன் துடித்தான். ஆனல் பிரபுவுக்குப் பக்கத்தில் இருக்கும் மதியூகி ஒருவர் தடுத்தார். “காலங் கெட்டு வருகிறது. சாக்கிய முனியின் கூட்டம் கிளம்பி சாதி பேதத்தைக் கண்டித்து, கலகம் செய்து வருகிருர்கள். கருணை, அன்பு, என்றெல்லாம் சொல்லி மயக்கி வருகிருர்கள். இப்

பொழுது, கடுமையான தண்டனை வேண்டாம். அந்த சண்டாளப் பெண்ணுக்கு இலேசான தண்டனை கொடுத்துப் பயமுறுத்தி வைக்கவும். அது போதுமானது.'' குதிரை வீரன் நான்கு காவல்காரர்களை கிருதியின் சேரிக்கு அனுப்பி வைத்தான்.

நான்கு வீரர்கள் வந்துவிட்டார்கள் கிருதி முன்னால் நின்றாள்.

“நீதான் அந்த நீசப்பெண்ணா?''

கிருதி மண்டியிட்டு, பின் மண்ணில்விழுந்து வணங்கினாள். அவளால் எழுந்திருக்க முடியவில்லை. மாலிகை கட்டுகளை அவிழ்த்து விட்டாள்.

“சண்டாளப் பெண்ணே! நீ எவ்வளவு பெரிய பாவஞ் செய்துவிட்டாய் தெரியுமா? ராஜகுரு அகோரமூர்த்தியை அசுத்தப் படுத்திவிட்டாய்! அதனால் பிரபு கபாலசேனரின் யாகம் நின்றுவிட்டது.''

“நான் மகாப் பாபிங்க!'' கிருதி அழுதாள்.

“இருந்தாலும் சூட்டுக்கோலுடன் இந்தத் தடவைவிட்டு விடுகிறோம். மறுபடியும் இது மாதிரி நீயோ, வேறு யாரோ செய்தால் மரண தண்டனை நிச்சயம்.

சேரிக்கூட்டம் பெருமுச்சுவிட்டது! கண்ட துண்டமாக்குவதற்குப் பதில், கையில் சூடு போடுவதுடன் நிறுத்திக்கொள்ளப் போகிறார்கள்! உயிர் பிழைத்தோமென்று கிருதி சுற்றிலும் பார்த்தாள். எல்லோரும் மலர்ச்சியுடன் அவளைப் பார்த்தார்கள்.

கிருதியின் புது உற்சாகம் நெருப்புக்குண்டத்தைப் பார்த்ததும் மறைந்துவிட்டது. அனல் வீசியது, அதில் இரண்டு இரும்புக் கம்பிகள் பழுத்துக்கொண்டிருந்தன! கிருதிக்கு மயக்கம் வரும்போலிருந்தது, கண்ணை மூடிக் கொண்டாள்!

பழுக்கக் காய்ச்சி இரும்புத் துண்டுகளை போர் வீரன் வெளியில் எடுத்தான், கூட்டத்தினரின் கண்கள் கூசின!

“இங்கே வா!''

கண்களைத் திறக்காமல் கிருதி முன் வந்தாள்.

“கைகளை நீட்டு!''

குருடைப்போல, அவள் கைகள் நீட்டினாள்.

இரும்புக்கோலை மறுபடியும் தீயில் உலர்த்தி, வீரன் கொண்டுவந்தான்.

பழுக்கக் காய்ச்சிய இரும்புகள் தாழ்ந்தன! பசுமையான கைகள்! மறுகணம் சுரீரென்றது, “ஆ!'' என்ற கூக்சலுடன் கிருதி மூர்ச்சையாகி விழுந்தாள். இரத்தம் புகையானது, மாமிசம் சுடப்பட்ட வாசனை அடித்தது.

வேலை முடிந்ததும் வீரர்கள் புறப்பட்டு போனார்கள், கௌசாம்பி நகர்நோக்கி, கூடியிருந்தவர்கள் திகைப்புடன் கிருதியைத் தொட்டுப் பார்த்தார்கள். உயிர் போகவில்லை,

கௌசாம்பி நகரில் பத்துநாள் பாத பூஜை-அகோரமூர்த்தியின் பாதங்களுக்கு பூஜை—நடந்தது. ஆயிரங்குடம் புண்ணிய தீர்த்தத்தால் அவரது காலைக் கழுவினார்கள். அசுத்தமாக்கப்பட்ட பிராமணோத்தமர் சுத்தமாக்கப்பட்டதும், கபலசேனனின் யாகம் ஆரம்பித்தது. தான தருமங்கள், அர்ச்சனை ஆராதனைகள் நடந்தன. யாகக்குண்டத்து புகைவளர்ந்தது, வேதவொலி நிரம்பியது. சகல ஆடம்பரங்களுடன், யாகம் நிறைவேறியது. அகோரமூர்த்தி புறப்பட்டுச் சென்றார். வேறோர் நகரத்துக்கு, அங்கு ஒரு யாகம் நடத்த!

கிருதி குற்றுயிரும் கொலையுயிருமாய் கிடந்தாள்! கைகளில் ஏற்பட்ட புண்கள் ஆறவில்லை. காய்ச்சல் அதிகமாகி, பிரக்ஞையற்று சிலநாள் இருந்தாள்! அவள் இறந்துவிடுவாள் என்றே சேரியினர் நம்பினார்கள்! அதிலும் அகோரமூர்த்தியை அசுத்தப்படுத்திய பாபம் அவள் மேலிருந்தது. அதனால்தான் புண் ஆறவில்லையென்று" பெரியவர்கள் சொன்னார்கள்! ஆனாலும் மாலிகைத் தன் தோழிக்குப் பக்கத்திலிருந்து பணிவிடைகள் செய்தாள். புண் ஆறத் தொடங்கியது. இரண்டு பெரிய தழும்புகள் அவள் கைகளில் தங்கின.

கிருதியின் தண்டனை மற்றவர்களுக்கு எச்சரிக்கையானது. உயர்ந்த சாதிக்காரர்கள் பக்கமோ, இராசபாட்டையின் பக்கமோ யாரும் போவதில்லை. அதுவுமின்றி, சேரியிலுள்ளவர்கள் வெளியில் எங்கும் போகக்கூடாது, வேறு எவரையும் உள்ளே வரவும் அனுமதிக்கூடாது என்று பிரபு உத்தரவு அனுப்பி இருந்தார். ஏனென்றால், சாக்கியமுனி என்ற மோசக்காரன் ஒருவன் தலைமையில் சூதுக்காரர்கள் பலர் கிளம்பி யிருக்கிறார்களாம், சாதுக்கள் போல வேடமிட்டு, அரச குரு அகோரமூர்த்தி, உயர்ந்த சாதிக்காரர்கள் இவர்களுக்கெதிராகக் கலகம் செய்கிறார்களாம். குல தர்மங்களைவிட்டு, ஆசார அனுஷ்டானங்களை மறுத்து, மக்களைத் தங்கள் பேச்சால் மயக்கி, பாபிகளாகும்படி அந்தக் கூட்டத்தினர்

தூண்டுகிறார்கள். அந்த மோசக்காரர்கள் யாரும் பார்க்காமல் இருக்கவேண்டுமென்பது ஆண்டையின் உத்திரவு. அதன்படி சேரியி லிருந்தவர்கள் வெளியில் எங்கும் போகாமல், அடங்கி யிருந்தார்கள். குலதர்மத்துக்கு பழக்கவழக்கத்துக்கு விரோதமாகப் பாபஞ் செய்தால், கிடைக்கும் தண்டனையை கையி லிருந்த தழும்பு கிருதிக்கு நினைவுறுத்தியது. சேரியினருக்கு, அதைப்போல நினைவுறுத்தும் தழும்பாக கிருதி இருந்தாள். கிருதியைப் பார்க்கும்பொழுது, அடங்கியிருக்க வேண்டு மென்ற எண்ணம் சேரியினருக்கு உண்டாகும்.

மறுகோடை வந்தது. கிருதி நடமாடும் நிலை யில் இருந்தாள். ஒருநாள் நீர்கொண்டு வர கிணற்றடிக்குப் போயிருந்தாள். அவள் தவிர வேறுயாருமில்லை. குடத்தைக் கீழேவிட்டாள். குடம் தண்ணீரில் அழுந்தாமல், மிதந்து கொண்டிருந்தது. கிருதியின் மனமும் மிதந்து கொண்டிருந்தது. இதுபோன்ற வெய்யில் நாளில் தண்ணீரெடுத்து இராசப்பாட்டை யில் படுத்துறங்கியதற்குத்தான் கையில் சூடு போட்டார்கள். ஈனச்சாதியாக இந்த சென்மத் தில் பிறந்தபோதிலும், அடுத்த சென்மத்தி லாவது உயர்ந்த சாதியில் பிறக்கவேண்டும். இராசபாட்டையில் போகலாம், அரண்மனை களில் நுழையலாம், உயர்ந்த சாதிப் பெண் களைப்போல பட்டாடைகள் போடலாம். உயர்ந்த சாதியில் பிறப்பதற்கு என்ன செய்ய வேண்டும்? கைப்புண்ணுடன் குடிசையில் படுத்திருக்கும்பொழுது மாலிகை பல கதை கள் சொல்லியிருக்கிறாள். பக்தியுடன் இருப்ப வர்கள், புண்ணியம் செய்தவர்கள் உயர்சாதி யில் பிறப்பார்களாம். போன சென்மத்தில் பக்தியில்லாமல். பாவ காரியங்களைச் செய்த தால்தான் இப்பொழுது சண்டாள சாதியில் பிறந்துவிட்டாள்' ஏன் அப்படி இருந்தோம்?

குடத்தில் நீர் நிறைந்து, கனம் கீழே இழுத் தது. யோசனை கலைந்து கிருதி குடத்தை வெளியே எடுத்தாள்.

"அம்மா!"

கிருதி திரும்பிப் பார்த்தாள்.

நாலைந்து பேர்கள், மஞ்சளாடைகளுடன் நின்றுகொண்டிருந்தார்கள். மொட்டையடிக் கப்பட்ட தலை வெய்யலில் மின்னியது.

"தாகமாயிருக்கிறது. தண்ணீர் கொஞ்சம் தாருங்கள்!" முதலில் நின்றவர் கேட்டார். உயர்ந்த தோற்றம், கம்பீரமான பார்வை, கனிவான பேச்சு!

அவர்களைப் பார்த்ததும், வெய்யிலில் நீண்ட தூரம் நடந்து களைத்து வந்திருக்கிறார்கள் என்பது தெரிந்தது. பொன்னிறமேனியில் வியர்வைத் துளிகள் படர்ந்திருந்தன. அவர் கள் தாகத்துடன் இருக்கிறார்கள், குடத்தில் குளிர்ந்த நீரும் இருக்கிறது. ஆனால்...ஆனால் ...ஆனால்...மறுபடியும் அவர்களைக் கிருதி பார்த்தாள். நிச்சயமாக அவர்கள் மேல்சாதிக் காரர்கள். கிருதியின் நெஞ்சு திடுக்கிட்டது, உடல் பதறியது! தான் தொட்ட தண்ணீரை அவர்களுக்குத் தருவது, பாவம்,

"பாவம்! பாவம்! நான் தண்ணீர் கொடுத் தால் பாவம்!" கிருதி குளறினாள். சொல்ல முடியாமல் அவள் உதடுகள் துடித்தன,

"தாகத்திற்குத் தண்ணீர் கொடுப்பது பாவ மல்ல மிக நல்ல காரியம்;"

"இல்லை ஐயா! நீங்கள் மேல்சாதிக்காரர் கள்."

கிருதி சொல்வது புரியாமல், "என்னம்மா சொல்லுகிறாய்?" என்று சாது சற்று அருகில் வந்தார். அவர் கேட்பதில் பணிவும், குளிர்ச்சி யும் இருந்தன.

"நான் உங்களுக்குத் தண்ணீர் கொடுக்கக் கூடாது. நீங்கள் அசுத்தப்பட்டு விடுவீர்கள்" கிருதி குனிந்துகொண்டாள், கையிலிருந்த தழும்புகள் தெரிந்தன. வேதனைக் குரலில் சொன்னாள். "நான் சண்டாள சாதியில் பிறந் தவள்."

"அம்மா! நான் கேட்டது குடிக்கத் தண் ணீர், நீ பிறந்த குலத்தையல்ல! சீக்கிரம் கொடு! நாங்கள் போகவேண்டும்."

கிருதி திகைத்தாள்.

புன்னகையுடன் சாது குனிந்து, கையைக் குவித்துக்கொண்டார். கிருதி, அவளையு மறியாமல் குடத்தை எடுத்து, மெதுவாகச் சாய்த்தாள்,

குடத்திலிருந்து தண்ணீர் வழிந்தது.

கிருதியின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது.

சாது தாகமடங்குமளவு தண்ணீரைக் குடித் தார். "போதுமம்மா, நன்றி!" சாது கைகூப்பி வணங்கினார். பின் மஞ்சளாடையைச்சரிசெய்து புறப்பட்டார். நீர்மல்கிய கண்களுடன் கிருதி நின்றாள்.

"அம்மையே! எங்களுக்கும் தண்ணீர்!"

கிருதி மறுபடியும் குடத்தைச் சாய்த்து, தண்ணீர் வார்த்தாள். இருந்தாலும், முதலில் ஏற்பட்ட திகைப்பு, உண்டான சந்தேகம் நீங்கவில்லை தண்ணீரை ஊற்றிக்கொண்டே "ஐயா! இந்தத் தண்ணீரைக் குடிப்பதால், நீங்கள் அசுத்தமாகிவிடமாட்டீர்களா?" என்று கேட்டாள்.

"நல்ல குடி தண்ணீர்தானே எப்படி அசுத்தமாகும்?" பக்கத்தில் நின்ற சாது சொன்னார்.

"நான் தாழ்ந்த சாதி, நீங்கள் மேல்சாதிக்காரர்கள் என் கைப்பட்ட தண்ணீர்......"

கிருதி முடிக்கவில்லை, தண்ணீரைக் குடித்து, முகத்தைத் துடைத்துக்கொண்ட சாது சிரித்துக்கொண்டு, "இல்லையம்மா, நாமெல்லாம் ஒரே குலம்தான்! என்றார்.

"நீங்களும் தாழ்ந்த குலம்தானா?"

கிருதி ஆச்சரியத்துடன் கேட்டாள், அவர்களுடைய பேச்சையும், தோற்றத்தையும் பார்த்தால் அப்படித் தோன்றவில்லை.

"நாமெல்லோரும் ஒரே மனிதகுலம்தான்! மனிதர்களுக்குள் உயர்ந்தசாதி, தாழ்ந்தசாதி கிடையாது."

"அப்படியானால், சாதிபேதமெல்லாம்..."

"வெறும் மனப்பேதந்தான்."

கிருதிக்கு ஒருபுறம் புதுமையாக இருந்தது. மறுபுறம் திகைப்பு வளர்ந்தது. முதலிலிருந்த நடுக்கம் நீங்கி, தண்ணீரைமொண்டு வேண்டுமளவு வார்த்தபடி, இருந்தாள். தாழ்ந்த சாதியென்று தண்டிக்கிற உலகை அவளுக்குத்தெரியும். உயர்ந்த சாதியென்று கிடையாது, மனிதரெல்லாம் ஒரே குலம்தான் என்று கூறுபவர்கள் அவளுடைய "உலகில்" புதுமையாக இருந்தார்கள்.

"நீங்களெல்லாம் யார்?" கடைசியாக கிருதி கேட்டாள்.

"புத்தபிட்சுகள்; புத்தரின் அன்பு மார்க்கத்தைச் சேர்ந்தவர்கள்"

கிருதி கேட்கும் கேள்விகள் அவர்களுக்குச் சலிப்பைத் தரவில்லை. மிகப்பணிவுடன் பதிலளித்தார்கள்.

புத்த பிட்சுகள்! கிருதி இதற்குமுன் அந்தப் பெயரைக் கேட்டிருக்கிறாள். ஆம்! "நீங்கள் சாக்கிய முனியின் கூட்டத்தைச் சேர்ந்தவர்களா?"

"ஆமாம்! அவரைப் புத்தர் என்று நாங்கள் குறிப்பிடுகிறோம்."

சாக்கியமுனி என்பவனின் தலைமையில் ஒரு கூட்டம் கிளம்பி, நாட்டில் கலகம் செய்கிறார்கள் என்று அவள் கேள்விப்பட்டிருக்கிறாள். அந்தக் கூட்டத்தினரைப்பற்றி சொல்லப்படுபவை ஞாபகத்துக்கு வந்தன. பயங்கரமானவர்கள், துரோகிகள், பாபிகள்.

"மோசக்காரர்கள், சாது வேடத்தில் கிளம்பியிருக்கும் சூதுக்காரர்கள்!" கடைசி இரண்டையும் வாய்தவறி கிருதி சொல்லிவிட்டாள்.

அவர்கள் கோபப்படவில்லை, "இதைவிட அதிகமாக எங்களைத் திட்டியிருக்கிறார்கள், தூற்றியிருக்கிறார்கள்."

"ஐயா! நான் சொல்லவில்லை, சேரியில் சொல்லப்படுவதை நினைத்தபொழுது, வாய் தவறி சொல்லவிட்டேன்! உங்களைப் பார்த்தால்......" "கிருதிக்கு என்ன சொல்வது என்று புரியவில்லை.

"பயங்கரமாக, இல்லையா?" சிரித்துக்கொண்டார்.

"ஐயா! முதலில் தண்ணீர் குடித்தாரே! அவர்தான் புத்தரா?"

"அவர் ஆனந்தர். புத்தரின் முக்கிய சீடர். எங்களுக்கெல்லாம் உற்ற வழிகாட்டியாக இருப்பவர்."

"நீங்களெல்லாம் பித்தபிட்சுக்களாகப் பிறந்தீர்களா?" வேடிக்கையான கேள்வி! பேதைப் பெண்ணுக்கு கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவல் அதிகமானது. ஆனால் என்ன கேட்பது என்று புரியவில்லை.

"இல்லையம்மா! யாரும் பிட்சுவாகப் பிறக்கவில்லை! புத்தர்கூட சித்தார்த்தனாக, இளவரசனாக இருந்தார். அன்புமார்க்கத்தை போதிக்க, அனைவரும் சமம் என்ற நிலையைப் பரப்ப அரச வாழ்வைவிட்டு வந்தார்"

"ஆனந்தர்?"

"அவரும் அரச குமாரராக இருந்தவர்கள்.

"நீங்களெல்லாம் உயர்ந்த சாதியில் பிறந்தவர்கள்தானே! உயர்ந்த சாதியில் பிறந்தோம், தாழ்ந்த சாதியில் பிறந்தோம்! ஆனால் புத்தரின் பொன்மொழிகளைக் கேட்ட பிறகு, அன்பு மார்க்கத்தில் ஈடுபட்ட பிறகு, சாதிகளை விட்டோம், மனிதர்களானோம்,' எங்கள் கண் முன் சண்டாளனும், பிராமணனும் ஒரே குலம்தான்."

"அப்படியானால் தாழ்ந்த சாதியார் தொட்டால், நீங்கள் தண்டிப்பதில்லையா?" கிருதி சயக்கத்துடன் கேட்டாள்.

"உனக்கு இன்னும் சந்தேகம் தீரவில்லை. நாங்கள் பிறப்பில் பேதங் காணுவதில்லை. நினைக்கும் எண்ணம், செய்கிற செயல் உயர்ந்ததாயிருந்தால் அவன் உயர்ந்தவன், தாழ்ந்ததாயிருந்தால் அவன் தாழ்ந்தவன். தண்ணீரென்று கேட்டதும் இல்லையென்று கையை அசைத்து அனுப்பலாம், அல்லது "இதோ" என்று அதேகையால் தண்ணீரை வார்க்கலாம்! தண்ணீர் கிடையாது என்று சாதி பேதங்காட்டி அனுப்பினால், எவ்வளவு உயர்ந்தசாதியென்றாலும் அவன் கைதாழ்ந்ததாகிறது. எவ்வளவு தாழ்ந்த சாதியென்றாலும், தண்ணீர் வார்க்கும் கை உயர்கிறது. இதோபார்! தாழ்ந்த சாதியென்று நீ உன்னைச் சொல்லிக்கொண்டாலும், அன்புடன் தண்ணீர் தந்த உன் கரத்தைத் தொட்டு நாங்கள் வணங்குகிறோம். சாது கிருதியின் கரத்தைத் தொட்டு வணங்கிவிட்டுப்போனார்.

"நாங்கள் போகிறோம், நன்றி அம்மா!" என்று மற்ற சாதுக்கள் பின்தொடர்ந்தார்கள்.

நீர்மல்கும் கண்களுடன் கிருதி அவர்கள் போகும் திக்கைப்பார்த்தபடி நின்றாள்.

மாலிகை தேடிவந்தாள். கண்ணீரைத் துடைத்துக் கொண்டிருக்கும் கிருதியைப் பார்த்ததும் அவள் பயந்தாள். "மறுபடியும் மேல்சாதிக்காரர்கள் வந்தார்களா?"

கிருதி தலையசைத்தாள்.

"நீ என்னசெய்தாய்? அவர்கள் என்ன செய்தார்கள்?"

"தண்ணீரை எடுத்து நான் ஊற்றினேன். அவர்கள் குடித்தார்கள்."

"ஐயோ! அக்கிரமம் செய்துவிட்டாயே? நீ தாழ்ந்தகுலம் என்பது தெரிந்ததும், அந்த உயர்ந்த சாதிக்காரர்கள்..."

கண்ணைத்துடைத்து, கிருதி புன்னகை செய்தாள். மாலிகை! அவர்கள் உண்மையில் உயர்ந்த குலத்தவர்கள்—உயர்ந்தவர்கள். நான் சண்டாள சாதி என்பது தெரிந்ததும், அவர்கள் தண்ணீர்: பெற்று குடித்தார்கள். அதுமட்டுமா என் கைப்பட்ட தண்ணீர் மேல் சாதிக்காரரின் காலடியில் பட்டுவிட்டது என்பதற்காக அவர்கள் என்னை சவுக்கால் அடித்தார்கள். கையில் சூடுபோட்டார்கள். இவர்களோ அன்புடன் பேசினார்கள், ஒரு சாது என்கையைத்தொட்டு, கும்பிட்டுவிட்டுப் போனார். என்னால்கூட நம்பமுடியவில்லை.

"இவர்கள் யார்?"

"சாக்கிய முனியின் கூட்டத்தினர், புத்த பிட்சுகள், அன்புமார்க்கத்தைச் சேர்ந்தவர்களாம்."

"மாலிகா! மோசக்காரர்கள், சூதுக்காரர்கள், என்று அவர்களைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். நேரில் பார்த்தால் அப்படிச்சொல்ல மாட்டாய்! அதிலும் நம்மை மோசம்செய்ய நம்மிடம் என்ன இருக்கிறது? அவர்களைப் போன்ற உண்மையான அன்புடையவர்களை நாம் பார்த்திருக்கமுடியாது. எவ்வளவு கனிவுடன் பேசினார்கள், சூதுக்காரர்கள் மோசக்காரர்கள், என்று நான் சொன்னபோதும் அவர்கள் கோபப்படவில்லை. ராஜகுருவின் கூட்டமென்றால் என் நாக்கை அறுத்து, என்னைக் கண்டதுண்டமாக வெட்டிப்போட்டிருப்பார்கள். இவர்களோ கோபமெதுவுமின்றிப் பேசினார்கள். சாந்தம், அன்பு, கனிவு, இவைகளை அவர்களிடம்தான் பார்க்க வேண்டும்."

"பின்பு எதற்காக அவர்கள் கூட்டங்கூட்டமாகச்சென்று நாடெங்கும் கலகம் செய்கிறார்களாம்."

"கலகம் செய்யவில்லையாம். நியாயம்பற்றிப் பேசுகிறார்களாம். என்னிடம்கூட சொன்னார்கள், நாமெல்லோரும் ஒரே மனிதகுலம்தான்! மனிதர்களுக்குள் மேல்சாதி, கீழ்சாதி இடையாது என்று"

"அப்படியானால் சாதிபேதம்."

"எல்லாம் வெறும் பணப்பேதந்தான் என்று அவர்கள் சொன்னார்கள்."

மாலிகை திகைத்துப்போனாள், "கிருதி! இப்படியெல்லாம் சொல்லிக்கொண்டிருக்காதே! யாராவதும் விழுந்தால், நம் தோலை உரித்துவிடுவார்கள்!"

"மாலிகை! முதலில் எனக்கும் திகைப்பாகத்தான் இருந்தது. ஒரு சாது சொன்னார் எங்கள் கண்முன் சண்டாளனும் பிராமணனும் ஒன்றுதான்' என்று அவர்கள் சொல்வதைக் கேட்டபொழுது நியாயமாகத்தான் தோன்றுகிறது. இல்லை, நானுந்தான் கேட்கிறேன், மேல்சாதி, கீழ்சாதி என்றெல்லாம் ஏன் இருக்கவேண்டும்."

"அடிபாவி! நீயும் அவர்களைப்போல் பேச ஆரம்பித்துவிட்டாயா?"

“நீ அவர்களைப்பார்த்துப் பேசவில்லை, அதனுல்தான் இப்படிச் சொல்கிருய். அவர்களில் ஆனந்தர் ஒருவர் இருந்தார், அரசகுமாரனுய் இருந்து, பின் புத்தமார்க்கத்தில் ஈடுபட்டு ஆண்டியாகிவிட்டாராம்! அவர்தான் முதலில் குடிதண்ணீர் கேட்டவர். சண்டாளசாதி, தாழ்ந்த குலம், என்று நான் சொன்னதும், ‘அம்மா! நான் கேட்டது குடி தண்ணீர், நீ பிறந்த குலத்தையல்ல!’ என்று சொன்னுர். அரசகுடும்பத்தில் பிறந்தவர். அவர் நான் தொட்ட தண்ணீரைக் குடித்தார். அவருடைய களைபொருந்திய முகம், அன்பான பேச்சு! கிணற்றுநீரை முழுவதுங்கூட நான் இறைத்துக்கொடுத்திருப்பேன்!”

கிருதியின் பேச்சு மாலிகைக்குப்புரியவில்லை. “வா, கிருதி போகலாம்.”

“எங்கு?”

“சேரிக்கு!”

“நான் அங்கு வரவில்லை.” கிருதி குடத்தை இடுப்பில் வைத்துக்கொண்டு நடந்தாள்.

“நீ எங்கே போகிருய்?”

“புத்தர் இருக்குமிடத்திற்கு!”

* * *

புத்தர் தங்கியிருந்த விகாரத்தில் கூட்டம் அதிகமாக இருந்தது. பிட்சுக்கள் கூட்டங்கூட்டமாகச் சேர்ந்து உட்கார்ந்து பலபொருள்களைப்பற்றி பேசிக்கொண்டிருந்தனர். வருவோரும், போவோரும் வாயிலை மறைத்துக்கொண்டிருந்தனர். அடுத்துள்ள சோலையில் பிட்சுக்கள் சிலர் அமர்ந்திருந்தனர். எல்லோரிடமிருந்து தள்ளி, சோலையின் ஒரு பகுதியில் ஒரு மேடைமீது புத்தர் தனியாக அமர்ந்திருந்தார். அவர் கண்கள் மூடியிருந்தன. உலகின் கவலைகளையெல்லாம் தனதாக்கிக்கொண்டவர்; அதேசமயத்தில் உலகின் சாந்தமெல்லாம் அவர் முகத்தில் திரண்டிருந்தது.

சிந்தனை கலைந்து, புத்தர் கண்விழித்துப் பார்த்தார். மேடையைப் பிடித்து ஒரு பெண்—கிருதி மண்டியிட்டிருந்தாள்- அவள் புத்தரைப் பார்த்தாள்.

அருளொழுகும் கண்கள்! அங்கு அன்பு ஒளி வீசியது, சாந்தம் ததும்பி வழிந்தது! ஒரு கணம் கிருதி அசைவற்று இருந்தாள்.

“என்னம்மா வேண்டும்?” புத்தரின் கனிவு குழைந்த சொற்கள் கிருதியின் கண்களில் நீர் சுரக்கச் செய்தன. அவர் மனிதரல்ல உலகைக் காக்கவந்த கடவுள்.

“நீங்கள்தான் கடவுள்! என்னைக் காப்பாற்றுங்கள்:” புத்தரின் கால்களைப் பிடித்துக்கொண்டு கிருதி, வேண்டினுள்.

கைகளை விடுவித்து புத்தர் புன்னகைசெய்தார். “நான் கடவுள் அல்ல. கடவுளைப்பற்றியும் எனக்கு எதுவும் தெரியாது. நான் மனிதன்; புத்தன். உனக்கு என்ன குறை நேர்ந்தது?”

கிருதி எழுந்து நின்று, வணங்கியபடி “நான் சண்டாள சாதியில் பிறந்தவள், உங்களுடைய மார்க்கத்தில் என்னையும் சேர்த்துக்கொள்ளுங்கள்” என்றுள்.

“அம்மா! அது என் மார்க்கமல்ல, அன்பு மார்க்கம்! அதில் நானும் ஒருவனுக இருந்து பணியாற்றுகிறேன்! அதற்காக நான் யாரையும் சேர்க்கவில்லை, அறநெறியை ஒத்துக்கொள்பவர்கள் சேர்கிருர்கள்! சாதியைப்பற்றிக் கவலைப்படுவதில்லை, அன்பும் அறனும் உடையவர்கள் இந்த மார்க்கத்தில் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள்.”

கிருதி விகாரத்திலிருந்து பணியாற்றத் தொடங்கினுள். புத்த சாதுக்களைப்போல ஆக அவள் விரும்பினுள். ஆனுல் புத்தர் ஏற்றுக்கொள்ளவில்லை. திடீரென்று காட்டப்படும் உற்சாகம், உறுதிப்பட காலம் செல்லவேண்டும், இருந்தாலும் அந்த அறநிலையத்தில் கிருதி அயராது உழைத்தாள், கிருதியின் பணியும், பொறுப்பும் போற்றப்பட்டன. அவர்கள் மத்தியில் பழகும்பொழுது தான், சண்டாள சாதியில் பிறந்தவள் என்பதை மறந்தாள். சாதுக்களும், நிலையத்திற்குவரும் அன்பு மார்க்கத்தினரும் கிருதியிடம் தனிமரியாதையும் பணிவும் காட்டினுர்கள். ஊர்ஊராகச்சுற்றித் திரும்பும் சாதுக்களுக்கு வேண்டிய உடை, உணவு, மருந்து உதவிகள் இவைகளைத் தர அறநிலையத்தில் பிரசாபதி அம்மையின் தலைமையில் பெண்கள் கூட்டம் பணியாற்றிக்கொண்டிருந்தது. அதில் முக்கிய பங்கேற்று கிருதி பணியாற்றினுள். சிறிது காலத்துக்குள் அற நிலையத்திலுள்ளவர்களுக்கு கிருதியின் உதவி தவிர்க்க முடியாததாகிவிட்டது.

அறநிலையத்திலிருப்பவர்கள் எல்லோரையும் வரவேற்று உபசரித்தபோதிலும், ஆனந்தர் வந்தால் தனிப்பிரியுடன்- கவலையுடன் கிருதி பணியாற்றுவாள். வெய்யலில் திரும்பும்

ஆனந்தருக்கு பழம் பிழிந்த சாறு, குளிர்நீர் ஏதாவது தயாராக வைத்திருப்பாள். காலைக் கழுவி, இளைப்பாறும்பொழுது அவர் எவ்வளவுதடுத்தும் கேட்காமல் விசிறிகொண்டு வீசுவாள், "ஆனந்தருடையஉடை," 'ஆனந்தருடைய சுவடிகள்'' "ஆனந்தர் எங்கேபோயிருக்கிறார்?'' எல்லாம் கிருதிக்குத்தான் தெரியும். ஆனந்தரென்றால், குதுகலத்துடன் உற்சாகத்துடன் அவள் பணிபுரிய ஆரம்பிப்பாள்'

ஆனந்தர்! அவரைப் பார்ப்பது, அவர் சொல்வதைக் கேட்பது, ஆனந்தமாக இருந்தது! ஆனந்தர் வெளியே சென்றால் அவர் சென்ற திக்கைப் பார்த்தபடி கிருதி நிற்பாள்.

அந்த உத்தமர்தான் அவளைத் தாழ்ந்த சாதியிலிருந்து கைகொடுத்து வெளியேற்றியவர்!

தனியாக இருக்கும்பொழுதும் ஆனந்தரைப் பற்றிய நினைவே கிருதிக்கு இருந்தது! சிறு வயதில் கிருதி கதையொன்று கேட்டிருக்கிறாள். அருவருப்பான தோற்றமுள்ள ஏழைப் பெண் ஒருத்தி அழுதுகொண்டிருந்தாளாம், தன்னைப் பிறர்கொடுமை செய்வதை நினைத்து. அப்பொழுது ஒரு அரசகுமாரன் அவள் முன் தோன்றி கையைப் பிடித்துத் தூக்கினான். அந்த ஏழைப் பெண் உடனே அழகான அரசகுமாரியாகி விட்டாள். பின் இருவரும் சென்றார்களாம். இந்தக் கதை அவளுடைய நினைவுக்கு அடிக்கடிவரும்.

ஆனந்தர் இல்லாவிட்டால், அவளுக்கு வரவரப் பொழுதுபோவதில்லை, மறந்த நிலையில் பணியாற்றுவாள். ஆனந்தரைக் கண்டால், அவள் முகம் மலரும்.

அன்பு மார்க்கத்தைப் பரப்பிட புத்தபிட்சுகள் நான்கு திக்கிலும் செல்லத் தொடங்கினார்கள். ஆனந்தர் ஒரு சிறு கூட்டத்துடன் புறப்பட்டு வேற்றூர் செல்ல இருந்தார். அதற்கென ஏற்பாடுகள் நடைபெற்றன. ஆனந்தர் பிரிந்து செல்லப் போகிறார் என்றதும், கிருதி கலங்கினாள். அவள் மனம் நிலையற்று சுழன்றது. ஆனந்தரில்லாத இடம் பாலைவனம் போல அவளுக்குத் தோன்றியது. தன் மனதுள்படும் வேதனையை யாரிடமும் சொல்லிக்கொள்ள முடியாமல், கிருதி சோலையில் போய் உட்கார்ந்திருந்தாள்.

"ஏனம்மா, கலக்கத்துடன் உட்கார்ந்திருக்கிறாய்?''

கிருதி திடுக்கிட்டு எழுந்தாள். புத்தர் நின்றுகொண்டிருந்தார். கண்களைத் துடைத்துக்கொண்டு அவள் கைகூப்பி வணங்கினாள். புத்தர் மேடையில் உட்கார்ந்தார். கிருதி பேசாமல் நின்றாள். "கிருதி! ஏன் துன்பப்படுகிறாய்? யாராவது தீங்கு செய்தார்களா? வசை பேசினார்களா?''

அன்பு மார்க்கத்தைச் சேர்ந்தவர்கள் பிராமண மதத்தினரால் தூற்றப்பட்டார்கள், இழித்தும் பழித்தும் பேசப்பட்டார்கள், பல இடங்களில் தாக்கப்பட்டார்கள். அன்றாடம் வரும் செய்திகளைப் புத்தர் பொறுமையுடன் கேட்டுக்கொள்வார். ஆனால் வேதனையைத் தாங்கிக்கொள்ள முடியாமல் திகைத்தவர்களும், தேம்பியழுதவர்களும் உண்டு.

"இல்லை, குருவே! யாரும் தீங்கு செய்யவில்லை.''

புத்தர் பேசாமலிருந்தார்.

கிருதிக்குத் துணிவு வந்தது. புத்தரின்முன் யாரும் எதையும் மறைக்க முடிவதில்லை. "ஐயா! ஆனந்தரின் கூட்டம் போகும்பொழுது, நானும் அதனுடன் போக விரும்புகிறேன், அனுமதி தாருங்கள்''

புத்தர் எதிரில் நிற்கும் பெண்ணை கூர்ந்து, கவனித்தார். அவளுடைய துயரத்தின் காரணத்தை அவரால் புரிந்துகொள்ள முடிந்தது.

"ஆனந்தரை நீ காதலிக்கிறாயா?''

புத்தர் கேட்டது கிருதியைத் திடுக்கிட வைத்தது. அவள் தன் மனதிலிருந்தே மறைத்து வைத்திருந்த—அதுவரை எண்ணிக்கூட பார்க்காத இரகசியத்தை இவர் சுலபத்தில் கண்டு பிடித்துவிட்டாரே! ஆம்! அவளுக்குக்கூட அதுவரை தெரியாது. ஏழைப் பெண்ணை அரசகுமாரன் சந்தித்தான், அவன் கைபட்டதும் அவள் அழகியாகி அவனை மணந்தாள். கதைகூட அப்படித்தானே!

ஆனந்தரிடம் காதல்! இதுவரைக் கிருதி கூட சரியாக உணரவில்லை.

"ஆம், பிரபு! நான் அவரைக் காதலிக்கிறேன்! அவரிருக்குமிடத்தில் நானும் இருக்கிறேன், அவருக்கேற்ற பணிவிடைகளை அன்புடன் செய்வேன்! அதுவே எனக்குப் போதுமானது.''

பேதைப்பெண்! களங்கமற்ற உள்ளம்!

புத்தர் புன்னகையுடன் கேட்டார். "கிருதி உன்னுடைய இருதயத்தை நீயே சரியாக

உணரவில்லை. ஆனந்தரை நீ ஏன் காதலிக்கிருய், சொல்லமுடியுமா?''

"தாழ்ந்த குலப்பெண்ணுன என்னிடம் அன்புடன் முதலில் பேசியது அவர்தான்! நான் தொட்ட தண்ணீர் காலடியில் பட்டது என்றதும், என்கையில் சூடுபோட்டார்கள் ராஜகுருவின் ஆட்கள், ஆனுல் ஆனந்தர் குனிந்து நின்று குவிந்த கரத்துடன் நான் ஊற்றிய தண்ணீரை அன்புடன் ஏற்றுக்கொண்டார்!''

"பெண்ணே! நீ காதலிப்பது ஆனந்தரையல்ல, ஆனந்தருடைய அன்பை!''

கிருதி கண்களை அகலத்திறந்து பார்த்தாள்.

"அந்த அன்பு உனக்கு எப்பொழுதும் கிடைக்கும்! அதேவித அன்பை நீ பிறருக்கும் தரத்தவருதே!''

கிருதியின் துயரம் மறைந்தது. அறநிலையத்துக்குள் சென்று, பழையபடி வேலையில் ஈடுபட்டாள். ஆனந்தர் புறப்பட்டுச்செல்லும் பொழுது முகமலர்ச்சியுடன் வழியனுப்பினுள், புத்தர் அவளைப்பார்த்தபடி நின்ருர், நன்றியறிதலுடன் அவ்ரை வணங்கி, கிருதி உள் சென்ருள்.

சிலநாட்கள் சென்றதும் புத்தரும், மற்ற பிக்சுக்களும் அந்த இடத்தைவிட்டு வேற்று நாட்டுக்குக்கிளம்பினுர்கள். அங்கிருந்த அறநிலையத்தின் பொறுப்பை கிருதி ஏற்றுக்கொண்டாள். பிரிந்து செல்லும்பொழுது புத்தர் அவளைப்பார்த்து சொன்னுர். "கிருதி! அன்பு உன்னை இந்தப்பணிக்கு அழைத்தது. அன்புடன் பிறரிடம் நடந்துகொள். உனக்குத்தீங்கு செய்தவர்களிடம்கூட வெறுப்புக்காட்டாதே!

அடிமையிடம் அரசன் பெருந்தன்மையுடன் நடந்துகொண்டால், அது பாராட்டத்தக்கதே. ஆனுல் அதைவிட பாராட்டத்தக்கது, தனக்கு இழைக்கப்பட்ட துன்பங்களையெல்லாம் மறந்து அடிமையானவன் அரசனிடம் பெருந்தன்மையுடன் நடந்துகொள்வது! உன்னிடம் அகங்காரத்துடன் யாரும் நடந்துகொண்டால், அவர்களிடம் கோபங்கொள்ளாதே; அவர்களைப்பார்த்துப் பரிதாபப்படு!''

கிருதி வணங்கி நின்ருள்.

"அம்மையே! நன்ருக வாழ்வாயாக! தாழ்ந்த குலப்பெண் என்ருலும், உயர்ந்தசாதிப் பெண்களும் ஆண்களும் உன்னைப்பார்த்து நடந்துகொள்வார்கள். நீ சண்டாளப்பெண், சதுர்மறை பிராமணர்கள் உன்னிடம் பாடங்கேட்பார்கள். அன்பிலிருந்தும் அறத்திலிருந்தும் வழுவாமலிரு, உன்னுடைய வாழ்வு அரியணையில் வீற்றிருக்கும் அரசிகளின் வாழ்வைவிட உயர்ந்ததாகும்.''

புத்தரும் சாதுக்களும் கிளம்பினுர்கள். "இதோ! இருங்கள். நீண்டதூரம் செல்லப்போகிறீர்கள்;'' என்று சொல்லி, கிருதி உள்ளே ஓடிப்போய் குளிர் நீர்ப்பானையுடன் வந்து, புத்தரிடம் தண்ணீர்க்குவளையைத் தந்தாள். புத்தர் அதைவாங்கி அருந்திவிட்டு, வெளியே வந்தார், பின்னுல் தொடர்ந்து ஒவ்வொருவராகக் கிருதியிடம் குவளையை நீட்டித்தண்ணீர் பெற்றனர்.

புத்தர் புறப்பட்டார், சாதுக்கள் தொடர்ந்தார்கள். அன்பின் உருவம் நடந்துசெல்வதைப்பார்த்தபடி கிருதி நின்ருள். அவள் கண்களில் துளிர்த்தநீர் கையின் தழும்புகளில் விழுந்தது. தழும்புகளை அவள் பார்த்தாள், தழும்புகள், தழும்புகளை ஏற்படுத்திய நிலை—தழும்புகளை ஏற்படுத்தியகாலம் தூரத்துக்குப் போயின. அன்பு—அன்புரைகள் — அன்பு மார்க்கம் அவைதான் அருகிலிருந்தன.

புத்தரின் அன்புவெள்ளம் நாடெங்கும் பரவியது. அதில் ஒரு சிறு அருவியாக கிருதியின் வாழ்வு கலந்து சென்றது.

இரா. செழியன்

புதிய வெளியீடுகள்

ஆசிரியர்: இரா. செழியன், எம்.ஏ.

போராட்டம் —(ஓரங்க நாடகங்கள்)

அண்டசராசரம் —(முதற்பகுதி)

(மற்றும் பல நூல்களும் தயாராகிக்கொண்டிருக்கின்றன)

விவரங்கட்கு;

மன்றம் அலுவலகம்: 26, நைனியப்பன் தெரு, சென்னை-1

அறிவு உதயம்

★

கென்டிலானி படுக்கையில் படுத்திருந்தான். பிராட்போர்டு நகரின் வாணிபச்செய்திகள், வெற்றிக்கு ஆதாரமான அந்தச் செய்திகள் உலகம் முழுதும் பரவியது. ஆனால் வெற்றி கென்னத்துக்கு அல்ல, வேறுயாருக்கோ! கால் பந்து ஆட்டத்தில் பலமான அடிபட்டு தோள் மூட்டுகள் மட்டும் தான் அசைக்க முடிந்தது. மற்றவேலை எதுவும் செய்யமுடியாமலிருந்தது. பலமான அடி. படுத்தபடுக்கை-என்றென்றும் எழுந்து நடமாடமுடியாதநிலை. இதிலிருந்து கொண்டே வெற்றிக்கு வழி காணத் துடித்தான், கண்டான்.

நாலுபேரைப்போல எழுந்து உலகில் நடமாட முடியாது அவனால். ஆனால் உலகம் அவனிருக்கும் இடம் தேடிச்செல்ல வழிகண்டான். தபால் தலைகள் சேகரிக்கும் தொழிலை மேற்கொண்டான். உலகின் வெவ்வேறு பகுதிகளில் வாழும் தபால் தலைகள் சேகரிப்பவர்களுடன் கடிதமூலம் தொடர்பு கொண்டான். வெகுவிரைவில் காலனி நாடுகளின் தாபல் தலைகளை வாங்கிவிற்க ஆரம்பித்தான். படுக்கையில் தன்அருகே இருக்கும்படி ஒரு சாய்ந்த பலகையில் 'டைப்' அடிக்கும் யந்திரத்தைப் பொருத்தினன். இன்று அவனுடன் தொடர்பு கொண்டுள்ளபலருக்கு, பதினெட்டு ஆண்டுகளாகப் படுக்கையில் இருக்கும் நோயாளி ஒருவனுடன் தாங்கள் தொடர்பு கொண்டிருக்கிறோம் என்பது தெரியாது.

மேகன் கிலேன், ஒரு கதாசிரியை. அவளின் மூன்று நாவல்கள் வெளிவந்து விட்டன. அவளுடைய ஏடுகள் பிறமொழியில் மொழி பெயர்க்கப் படுகின்றன. குருடர்களுக்காக பிரெய்ல் தனிமொழியில் ஆக்கப்படுகின்றன. மேகன் கிலேன் என்பது புனைபெயர், அவளது இயற்பெயர் மேட்ஜ் பாரி என்பதாகும். அவளது இளம்வயதிலிருந்தே வாதநோயால் பீடிக்கப்பட்டு செயல்இழந்து இருந்தாள். இவள் கூறுவனவற்றை 'டைப்' செய்வது இவளது தமையன். அவரும் வாதநோயால் தாக்குண்டவர்தான். சக்கரவண்டியில் உட்கார்ந்துகொண்டு அதில் இணைக்கப்பட்டுள்ள 'டைப்' இயந்திரத்தில் வேலைசெய்கிறார்.

பார்க்கப்போனால் 'மில்டனின்' சுவர்க்க இழப்பி'ன் பெரும்பகுதி படுக்கையில் எழுதப் பட்டதுதான். படுக்கையில் தலையணையை வைத்துக்கொண்டுதான், போர் வரலாற்றுப் பெரும் பகுதிகளை எழுதச்செய்தான், சர்ச்சில். மார்க்ட்வெயின் பிற்பகல் வரையிலும் படுக்கையைவிட்டு எழுந்திருக்க மாட்டான். 'ஹக்கில்பெர்ரிபின்' என்றஅவன் ஏடு உருவானஇடம் படுக்கையறைதான்.

படுக்கைதான் மிகச்சிறந்தஇடம். இலையுதிர் காலத்திலும், குளிர் காலத்திலும். குளிர் குறைப்பதும் அதுவே. உலகப் பேரறிஞர் பெர்னார்ட்சா பெரும்பாலும் படுக்கையிலும், சாய்வு மேசையிலும் இருந்தே எழுதுவார். தலையணையில் தலையைப் புதைத்துக்கொண்டு இருக்கும் பொழுதுதான் வின்சென்ட் பெண்டிக்ச் உழைப்பைக் குறைத்தும் பயன் அதிகம் அடையச்செய்யும் கழுவும் இயந்திரங்களைக் கண்டுபிடித்தார். இன்றைக்கும் அவர் பெயர்தாங்கிய இயந்திரங்கள் உலகில் அவர் புகழைப்பரப்பிக் கொண்டிருக்கின்றன.

படுக்கையில் இருந்தவாறு பாட்டுக்கட்டுவது என்பது அவ்வளவு சுலபமானதல்ல. ஆனல் பெரும்புகழ்பெற்ற ரிச்சார்டு ஸ்டார்ஸ், பெயர்போன சிலபாட்டுக்களை படுக்கையிலும் சாய்வுமேசையிலும் இருந்தவாறே எழுதினர்.

பி. பி. சி. ரேடியோவில் டெலிவிஷன் காட்சியைக்காண்பவர்களில் பலருக்கு, அந்தக்காட்சியில் விரிவுரையாற்றும் பணிசெய்பவர் சக்கரங்கள் அமைந்த நாற்காலியில் உட்கார்ந்திருப்பது தெரியாது. படுக்கையில் அதிகநேரம் படுத்திருப்பதே மைக்கேல் ப்ளாண்டர்ஸ்க்குப் பிடிக்காது. ஒருநாள் உள்நாட்டு ஒலிபரப்பின் போது தற்கால அரசியல் நிலைபற்றிய பேச்சு, மூன்றும் ஒலிபரப்பின்போது கவிதை வாசித்தல், இவைகளை முடித்துக்கொண்டு, கடைசியாக தான் எழுதிய பாட்டுக்கு இசையமைத்து

ஒலிபரப்புவதையும் கேட்க குறித்தகாலத்தில் போய்ச்சேர்ந்தார்.

எர்னஸ்ட் பிராட்ஸா, முதல் உலகயுத்தத்தில் பெரும்பங்கு ஏற்றுப் பணியாற்றினவர். யுத்தத்தில் பலத்தகாயமடைந்து படுக்கையில் இருந்தார். கழுத்தில் காயம் அதிகம். சிறிதளவுகூட அசைதல் முடியாது, கூடாது' இருந்தச்சங்கடமான நிலையில் தொலைபேசியின் மூலம் பண்டங்கள் வாங்கி விற்றுத் தொழில் நடத்தினர். வேலைக்கு வருபவர்களை நேரில் வரச்சொல்லி, சோதித்துப்பின் இசைவுதந்தார். தனக்கென ஒருதனி அலுவலகத்தையே உண்டாக்கினர். தொழில் சம்பந்தப்பட்டவர்களை நேரில் சந்திக்கவேண்டியிருந்த சமயங்களில் தன்னிருப்பிடம் வரவழைத்தோ, அல்லது தூதுவர்கள் மூலம் செய்தி அனுப்பியோ காரியங்களைச் சாதித்தார். யுத்தகாலத்தில் பிரிட்டனில் கட்டப்பட்ட விமானநிலையங்களில் பாதிக்குமேல் பிராட்ஸாவின் உதவியால் கட்டப்பட்டவை. இவ்வளவும் அவர் படுக்கையில் இருந்த நிலையிலேயே சாதிக்கப்பட்டவை பிராட்ஸா சாகும்தருவாயில் 15,000 பவுனுக்கு அதிபராயிருந்தார்.

நோயால் பீடிக்கப்பட்டு ஆசுபத்திரியில் தற்காலிகமாக படுக்கையில் இருந்தநிலையில் ஹோப் பிரைஸ் என்றஅம்மையார் தீப்பெட்டி, மூடி, தட்டுகள், கண்ணாடிப் பாத்திரங்கள் இவற்றை வாங்கி அவைகளில் தன் சொந்த முறையில் வர்ணம் தீட்டினர்கள். இந்தப் பொருள்கள் நல்ல விலைக்கு வாங்கப்பட்டன. குழந்தைகள் வளர்க்கும் இடம், வளர்ப்புப் பண்ணை முதலிய இடங்களில் உள்ள சாமான்களை அழகுபடுத்தும் வேலையில் கவனம் செலுத்தினர். ஆசுபத்திரியைவிட்டு வெளியேறியதும் கடை ஒன்றுவைத்து வர்ணம்தீட்டும் வியாபாரத்தை ஆரம்பித்தார். வியாபாரம் நாளடைவில் பெருகி, பெரியதோர் தொழிற்சாலை நிறுவும் அளவிற்கு உயர்ந்தது. மரச்சாமான்களிலும் மற்ற பொருள்களிலும் தான் வரையும் படங்களைப் பார்த்து எழுதபல பேர்களைவேலைக்கு அமர்த்தினர். ஆசுபத்திரியில் பொழுதுபோக்கிற்காகத் தொடங்கப்பட்ட இந்தத் தொழில் பிற்காலத்தில் மிக்கவருவாய் உடையதாய் விளங்கிற்று. "என் உடல்நிலை சரியின்றி ஆசுபத்திரியில் இல்லாமல் இருந்தால் இந்தத்தொழில் நான்ஆரம்பித்திருக்க முடியாது. ஒரு முதலாளியின்கீழ் வேலைசெய்யும்டைப்பிஸ்ட்டாகவே இருப்பேன் "என்று கூறினராம்.

இல்போர்டு நகரில் மிருகவைத்தியசாலையில் ஒரு புதிய ரணவைத்தியப்பகுதி தேவைப்பட்டது. குறைந்த பட்சம் 1500 பவுன்களாவது தேவைப்பட்டது. ஊரெங்கும் உண்டியல் குலுக்கினர்கள். இளைஞர் மன்றங்களில் உதவி நிதிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. 'கொடிநாள்' கொண்டாடப்பட்டது. பொது மக்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இதற்கெல்லாம் மூலகாரணம் 'இன்றைக்கோ, நாளைக்கோ' என ஆசுபத்திரியில் படுக்கையில் இருக்கும் ஒரு நோயாளி, என்பது அதிகம் பேருக்குத் தெரியாது. இவரது பெயர் சிட்னி காண்டர் என்பது. நூற்றுக்கணக்கான கடிதங்களைச் சொல்லி எழுதச்செய்தார். உறுப்பினர்கள் எண்களைக் குறித்துவைத்தார். ஆறுநூறு பணப்பெட்டிகளை உடைத்து, எண்ணி, சேர்த்தார்.

'மேற்கு எல்லை' கலாமண்டபத்தில் சமீபத்தில் தன் கலைத்திறனைக் காட்டிய கலைஞர் ஹான்ஸ் ஹாமர்ஸ்மிட், இவரது இடதுகை 'நொண்டி, தனக்கும் தன்குடும்பத்திற்கும் தன்ஓவியத் தொழில் மூலம் வருவாயைப் பெருக்கிக்கொள்கிரு்.

அங்கம் பங்கம் அடைந்தவர்கள் தங்கள் குறையை அகற்றி முன்னேறிய கதை மிகப் பெரியது. அதைப்போலவே, படுக்கையில் இருந்தவாறேதங்கள் வாழ்வைவளப்படுத்திக் கொண்டவர்களின் கதையும், தொடர்கதைதான். விஞ்ஞான உலகில் மருத்துவத்துறையில் பணியாற்றியவர் அவரது நாற்பத்தி ஆருவது வயதில் பச்சவாதம் என்னும் நோயால் தாக்குண்டு மாதக்கணக்கில்படுக்கையில் இருக்கவேண்டியதாயிற்று. படுக்கையில் நோயால் அவதிப்பட்டுக்கொண்டிருந்த அந்த நாட்களில் தொத்துநோய் பரப்பும் நோய்க்கிருமிகளைப்பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டார். அதன் விளைவாக, இன்று தொத்துநோயால் பீடிக்கப்படும் கோடிக்கணக்கான மக்களின் உயிர் காப்பாற்றப்படுகின்றது. அவர் தான் லூயி பாய்ச்சர்.

—ரோனுல்டு கார்த் டேவிஸ்.

'மன்றம்' சந்தா விபரம்

		உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்		6—0—0	7—8—0
ஆறு திங்கள்	,,	3—0—0	
தனி இதழ்	,,	0—4—0	0—5—0

இலங்கைக்கு வி. பி. மூலம்

ஆண்டுக் கட்டணம் 7—8—0

திராவிட முன்னேற்றக் கழக

2-வது மாநில மாநாடு

திருச்சி

★

நுழைவுக் கட்டணம்:

		நான்கு நாட்களுக்கும் சேர்த்து: ஆண்.	பெண்.			தனித்தனி ஒவ்வொரு நாளும்: ஆண்.	பெண்.
1-ம் பிரிவு	ரூ.	10—0—0	10—0—0	1-ம் பிரிவு	ரூ.	3—0—0	3—0—0
2-ம் பிரிவு	,,	5—0—0	2—8—0	2-ம் பிரிவு	,,	1—8—0	0-12—0
3-ம் பிரிவு	,,	3—0—0	1—8—0	3-ம் பிரிவு	,,	1—0—0	0—8—0

தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதி கட்டணம் (நுழைவு உள்பட) ரூ. 5—0—0

பொதுக்குழு உறுப்பினரல்லாதார் வரவேற்புக் குழுக் கட்டணம்: 25—0—0

எம். எஸ். மணி எஸ். முத்து

செயலாளர்கள்.

தமிழ் நாட்டில் தலை சிறந்த

வெண்சங்கு சீயக்காய்தூள்

எங்கும் கிடைக்கும்

எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம்—ராணி ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்

தயாரிப்பாளர் :- வெண்சங்கு சீயக்காய்தூள் தொழிற்சாலை

3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

Regd. M 6296 MANRAM

தி. மு. க. 2-வது மாநில மாநாடு

திருச்சி

மே 17, 18, 19, 20-இல்

பெரிய இரயில்வே நிலயத்திற்கு அருகிலுள்ள பந்தயத்திடலில் அமைந்துள்ள

'வள்ளுவர் நகரில்'

நடைபெறும்

தலைவர்: இரா. நெடுஞ்செழியன்

திறப்பாளர்: ஜி. பி. சோமசுந்தரம்

வரவேற்புக்குழுத்தலைவர்: ஏ. பி. தருமலிங்கம்

மாநாட்டில் கலைவிருந்து அளிப்போர்

என். எஸ். கிருஷ்ணன்	கே. ஆர். ராமசாமி
எம். ஜி. இராமச்சந்திரன்	நாகூர் அனிபா
எஸ். எஸ். இராஜேந்திரன்	ஜி. கஸ்தூரி
டி. வி. நாராயணசாமி	பி. எஸ். செல்வா

திருவாவடுதுறை டி. என். இராசரத்தினம்

கருத்துவிருந்து அளிப்போர்

அண்ணா

என். வி. நடராசன்	ஈ. வெ. கி. சம்பத்
கே. ஏ. மதியழகன்	மு. கருணாநிதி
க. அன்பழகன்	சி. பி. சிற்றரசு
கண்ணதாசன்	சத்தியவாணிமுத்து
ஏ. வி. பி. ஆசைத்தம்பி	என். எஸ். இளங்கோ
கி. மனோகரன்	கா. அப்பாத்துரை
காஞ்சி கல்யாணசுந்தரம்	அரங்கண்ணல்
அருண்மொழி	ப. உ. சண்முகம்
தில்லைவில்லாளன்	அ. பொன்னம்பலனார்
கே. கே. நீலமேகம்	எம். பி. சுப்பிரமணியம்
ஏ. கோவிந்தசாமி	இரா. சு. தங்கப்பழம்
எம். எஸ். இராமசாமி	அலமேலு அப்பாத்துரை

—மாநாட்டு விளம்பரக்குழு.

"மன்றம்" அச்சகத்தில் (26, நைனியப்பன் தெரு, மண்ணடி, சென்னை-1)
[redacted] அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது—